# குடும்ப பலிபீடம்

# (THE FAMILY ALTAR)

தேர்ந்தெடுக்கப்பட்ட வேதவாக்கிய வாசிப்புகள்
மற்றும் வில்லியம் பிரன்ஹாம் அவர்களின்
செய்திகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட
சிந்தனைகள்

# ஜூன் 1

 *1 தெசலோனிக்கேயர் 5:17*

**இடைவிடாமல் ஜெபம்பண்ணுங்கள்.**

 *செய்தி:* **56-05-13 மோசேயைக் குறித்த போதனை**

84. ஆனால் சிறு பையன்களே, சிறுமியரே தேவன் ஜெபத்தைக் கேட்கின்றாரா?

(சிறுவரும் சிறுமியரும் "அவர் ஜெபத்தைக் கேட்கின்றார்" என்று பதிலளிக்கின்றனர் - ஆசி).

அவர் ஜெபத்தைக் கேட்கின்றார்.

தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கின்றாரா? ("ஆம்") ஆமாம்.

உடனடியாக அவர் பதிலளிக்கிறாரா? எல்லா நேரத்திலும் அல்ல. அப்படி செய்கிறாரா? இல்லை.

சில சமயங்களிலும் அவர் நம்மை காத்திருக்கச் செய்கின்றார்? அது சரிதானே ("ஆம்").

ஆனால், தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கின்றார். அப்படித்தானே?

ஆகவே எல்லாக் காரியங்களும் தவறாகப் போகின்றது என்றால் நாம் ஜெபம் செய்வதை நிறுத்த வேண்டும் என்பதற்கு அது அடையாளம் அல்ல.

எப்படியாயினும் நாம் ஜெபித்துக் கொண்டே இருக்க வேண்டும். அப்படித்தானல்லவா? அது சரி.

இப்பொழுது நீங்கள் சரியாக பதிலளித்தீர்கள்.

தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கின்றார். நாமெல்லாரும் சேர்ந்து இதைக் கூறுவோமாக (சகோதரன் பிரான்ஹாமும் சபையோரும் "தேவன் ஜெபத்திற்கு பதிலளிக்கின்றார்" என்று கூறுகின்றனர் - ஆசி)

ஆம். சூழ்நிலைகள் எவ்வாறு இருப்பினும் அதைக் குறித்து ஒன்றுமேயில்லை, எப்படி யாயினும் அவர் பதிலளிக்கின்றார். அது சரி.

115. நாம் ஜெபம் செய்து கொண்டே இருக்கத் தான் வேண்டுமா? ஓ, ஜெபம் செய்து கொண்டே இரு! அது சரி தானே? ஜெபம் செய்து கொண்டே இரு. என்ன நடந்து கொண்டிருந்தாலும் பரவாயில்லை. ஜெபித்துக் கொண்டேயிரு.

126. ஆகவே பிறகு அந்த இரவு அவன், "நான் மேலே போகிறேன், முன்பு எப்பொழுதுமே ஜெபித்திராத வகையில் நான் ஜெபிக்கப் போகிறேன்" என்றான்.

127. இப்பொழுது, ஜெபம் அப்படித் தான் செய்யப்பட வேண்டும். அப்படித் தானே?

நீங்கள் முன்பு எப்பொழுதுமே ஜெபித்திராத வகையில் நீங்கள் ஜெபம் செய்யுங்கள், சீக்கிரம் அலுவலில் இறங்குங்கள்!

பாருங்கள் நீங்கள் சென்று "கர்த்தாவே இன்னார் இன்னாரை ஆசீர்வதியும்" என்று மாத்திரம் கூறுவீர்களானால் அதைக் குறித்து தேவன் அவ்வளவாக அக்கறைக் கொள்வதில்லை.

சிறு பையன்கள், சிறுமிகளாகிய நீங்கள் உங்கள் அலுவல்களில் ஈடுபடும் போது அதைச் செய்கிறீர்களா? அதை நீங்கள் பள்ளிக் கூடங்களில் செய்கிறீர்களா? பள்ளிக்கூடத்தில் உங்களுக்கு உதவி செய்ய தேவனிடத்தில் கேட்கிறீர்களா? நீங்கள் பள்ளிக்கூடத்திற்கு செல்லும் போது, அங்கே நீங்கள் நல்ல மதிப் பெண்களைப் பெறாவிடில், நீங்கள் சென்று, "தேவனே எனக்கு நீர் எனக்கு உதவ வேண்டுகிறேன்" என்று கூறுகிறீர்களா?

128. நீங்கள் ஜெபம் செய்கிறீர்களா? எத்தனை சிறு பையன்கள், சிறுமிகள் ஜெபிக்கின்றீர்கள். உங்கள் கரங்களை நான் காணட்டும். ஓ, அது அருமையானது. இப்பொழுது, அது அருமையானது.

உன் அம்மாவும் அப்பாவும் உன்னைக் காணக் கூடாதவாறு, நீங்கள் ஜெபிக்கத்தக்கதாக உங்களுக்கு ஒரு ரகசிய அறை இருக்கின்றதா? நீ அவ்வாறு ஜெபிக்கிறாயா? அந்த விதமாக நீ ஜெபிப்பதில்லையா?

ஒரு சிறிய இடத்தை வைத்துக் கொண்டு, சென்று உங்களுடைய சிறிய ஜெபத்தை செய்யுங்கள்.

ஒவ்வொரு இரவும் தூங்கச் செல்லும் முன்பு நீங்கள் அதைச் செய்கிறீர்களா? பிறகு காலையில் எழுந்தவுடன்? ஓ, அது அருமையானது.

ஜெபிக்கின்ற சிறுவர் சிறுமியர் இந்த கட்டிடத்தில் உள்ளனர். கைகளை உயர்த்துங்கள். ஓ, அது மிக அருமையானதல்லவா! நல்லது, இப்பொழுது, இது அருமையானது.

அது எதைக் காண்பிக்கிறது என்றால் இக்காரியங்களை உனக்கு கற்றுக் கொடுக்கும் உண்மையான தாயும் தந்தையையும் நீ பெற்றிருக்கின்றாய் என்பதே. இப்பொழுது,

உண்மையாகவே உங்களுக்கு தேவையிருக்கும் பட்சத்தில், நீங்கள் ஊக்கமாக ஜெபிக்க வேண்டும். அப்படி செய்கிறாயா?

134. உங்களுக்கு தெரியுமா, சில சமயங்களில் மக்கள் ஜெபம் செய்யும் போது, களைத்துப் போய் விடுகிறார்கள். தாய் தந்தையரே, அப்படித் தானே? ஓ, மிகவுமாக களைத்துப் போய் விடுகின்றனர்! சகோதரன் பிரான்ஹாம் சில சமயங்களில் மிகவுமாக சோர்ந்து போய் விடுகின்றார். நான் நீண்ட நேரம் ஜெபம் செய்யும் போது ஏறக்குறைய மயங்கி விழுந்து விடுவேன்; அப்படியே மயங்கி விழுந்து, நாட்கணக்காக உணவும் மற்ற காரியங்களையும், உட் கொள்ளாமல், ஜெபித்து, ஜெபித்து, ஜெபித்து, பிரசங்கித்துக் கொண்டிருத்தல். நான் மயங்கி விழுகின்ற நிலைக்கு நான் வந்து விடுவேன். சில சமயங்களில் ஜனங்கள் அவ்விதமாக ஆகிவிடுவர். அப்படி யென்றால் அதை விட்டு விட வேண்டும் என்பதல்ல. தொடர்ந்து சென்று கொண்டே இரு! தேவன் பதிலளிப்பார். ஆம் ஐயா. அப்படியே பிடித்துக் கொண்டிரு! ஆம், ஐயா.

# ஜூன் 2



*யோவான் 14:12-14*

**12. மெய்யாகவே மெய்யாகவே நான் உங்களுக்குச் சொல்லுகிறேன்; நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், என்னை விசுவாசிக்கிறவன் நான் செய்கிற கிரியைகளைத் தானும் செய்வான், இவைகளைப்பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் செய்வான்.**

**13. நீங்கள் என் நாமத்தினாலே எதைக் கேட்பீர்களோ, குமாரனில் பிதா மகிமைப்படும்படியாக, அதைச் செய்வேன்.**

**14. என் நாமத்தினாலே நீங்கள் எதைக்கேட்டாலும் அதை நான் செய்வேன்.**



*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜூலை 23, 1954**

19. அந்தப் பிரயாணம் மூன்று கட்டங்களாக இருந்தது என்பதைக் கவனியுங்கள்: அவைகளில் ஒன்று கில்காலுக்கும் மற்றொன்று அங்கேயிருந்து தீர்க்கதரிசிகளின் பள்ளிக்கும், அடுத்த ஒன்றானது அங்கிருந்து யோர்தானுக்குமாக இருந்தது.

இப்பொழுது, யோர்தான் தான் அவனுடைய கடைசி இடமாக இருந்தது, அவன் கவனிக்க வேண்டியிருந்த கடைசி நேரம். நாம் கடந்து வந்து கொண்டிருக்கும் சபைக்காலங்களை அது பிரதிநிதித்துவப்படுத்துகிறது. முதலாவது கில்காலிலிருந்து... சபையானது இருண்ட காலங்களிலிருந்து வந்த பிறகு, அது லூத்தரின் சீர்திருந்தம் வழியாக வந்தது. அதனுடைய இரண்டாவது கட்டம் வருகிறது, அவர்கள் அதை என்னவென்று அழைக்கிறார்கள், இரண்டாவது ஆசீர்வாதம் அல்லது கிருபையின் இரண்டாவது செயல்: ஜான் வெஸ்லி வழியாக பரிசுத்தமாக்கப்படுதல். பிறகு நாம் யோர்தானுக்கு வந்து, மரித்து அதன்பிறகு பரிசுத்த ஆவியைப் பெற்றோம். இப்பொழுது... தாண்டிச் சென்று விட்டோம்...

20. எலியா அதைத் தாண்டிச் சென்ற பிறகு, மறுபக்கத்திற்கு சென்று, அவன் வாலிப தீர்க்கதரிசியிடம் கூறினான்... இந்த இரண்டு தீர்க்கதரிசிகளும் கிறிஸ்துவையும் சபையையும் பரிபூரணமாக சித்தரிக்கிறார்கள். எலியா சபையிடம் அதிகாரத்தை விட்டு விட்டுப் போகிறான், அது சபையிடம் அதிகாரத்தை விட்டுச் சென்றிருக்கும் கிறிஸ்துவின் ஒரு மாதிரியாக இருந்தது. ஆனால் சபையானது லூத்தரின் காலத்தின் வழியாகவும், மெதோடிஸ்டு காலம் வழியாகவும் பரிசுத்த

ஆவியின் ஞானஸ்நானத்தின் வழியாகவும் வந்து, ஆசீர்வாதத்தைப் பெற்றுக் கொள்ள வேண்டுமானால் சுயத்திற்கு மரிக்கவும் வேண்டியதாயிருந்தது.

இப்பொழுது, அவர்கள் யோர்தானைக் கடந்து விட்டனர். அவர்கள் மேலே மலைக்குப் போய்க் கொண்டிருக்கின்றனர். எலிசா சுற்றிலும் திரும்பி, "நான் உனக்கு என்ன செய்ய வேண்டும்? நீ பொறுமையாக என்னை ஒவ்வொரு இடத்திலிருந்தும் பின்பற்றி வந்து கொண்டிருக்கிறதைக் காண்கிறேன், திரும்பிச் செல்லவில்லை. நீ தொடர்ந்து வர வேண்டுமென்று முடிவு செய்து விட்டாயா?" என்றான்.

எலிசா, "உம்முடைய ஆவி என்மேல் கட்டாயம் இரண்டு மடங்காக வர வேண்டும்" என்றான். அவ்விதமாகத்தான் கேட்க வேண்டும். பாருங்கள்? அதிகமாகக் கேளுங்கள். எனவே தேவன் அதை அந்தவிதமாகத்தான் கொடுக்க விரும்புகிறார். அப்படியே கொஞ்சம்... தொல்லை... ஜனங்கள் சொல்லுகிறார்கள், "நான்-நான் பிதாவிடம் அதிகமாகக் கேட்கிறேன்..." என்று. ஓ, என்னே, அவரிடம் கேட்க பயப்படாதீர்கள்: உங்களால் கேட்க முடிந்த எல்லாவற்றையும் கேளுங்கள். பெற்றுக்கொள்ளும்படியாக நீங்கள் கொண்டிருக்கும் விசுவாசம் எவ்வளவோ

அவ்வளவு அதிகமாக அவர் உங்களுக்குக் கொடுக்கப் பிரியப்படுகிறார். அவருடைய கையிருப்பு தீர்ந்து போகாது. தேவன் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டிருக்கிறார்.

21. ஏறக்குறைய அவ்வளவு அளவிலான ஒரு சிறு மீன் வெளியே சமுத்திரத்தின் மத்தியில் இருந்து கொண்டு, "நான் இந்தத் தண்ணீரை சிக்கனமாக குடிப்பது நல்லது; ஒருநாளில் நான் இதைத் தீர்த்து விடப் போகிறேன்" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஓ, என்னே... அது... ஏன், என்னே... தேவன் உங்களுக்காக வைத்திருக்கும் ஆசீர்வாதங்களுடன் ஒப்பிடத்தக்கது எதுவுமேயில்லை. எகிப்தின் மகத்தான களஞ்சியத்தின் அடியில் உள்ள ஒரு சிறு எலி, "நான் தினமும் கொஞ்சம் கோதுமை மணிகளை சாப்பிடுவதே நல்லது, ஏனெனில் அது குளிர்காலத்தில் கட்டாயம் மீதியிருக்காது" என்று கூறுவதை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? ஏன், அது ஆயிரம் வருடங்கள் உயிரோடிருந்தாலும் அதை ஒருபோதும் சாப்பிட்டு (முடிக்க) முடியாது. நீங்கள் இங்கே பூமியில் 10 மில்லியன் வருடங்கள் ஜீவித்தாலும், தேவன் சேமித்து வைத்திருக்கிற ஆசீர்வாதங்களை உங்களை விட்டு (எடுத்து), அதை நீங்கள் பருகாதிருக்கும்படி செய்ய அவரால் முடியாது.

உங்களுக்காக விடப்பட்டுள்ள ஆசீர்வாதங்கள் இன்னும் அதிகமாக இருக்கும், அவர் வற்றாத ஜீவ நீரூற்றாக இருக்கிறார். நீங்கள் உங்களையே அவரில் நடும் போது, இந்த நீரூற்றின் மூலமாக, அது நீர்க்கால்களின் ஓரமாய் நடப்பட்ட மரத்தைப் போலிருக்கும். எவ்வளவு மகிமையானது. அவர் தம்முடைய ஆசீர்வாதங்களைத் தமது ஜனங்களிடமாக உந்தித்தள்ளிக் கொண்டு அவர்களுக்கு அபரிமிதமாக கொடுக்க எவ்வளவாய் விரும்புகிறார்.

22. இந்தத் தீர்க்கதரிசி, மேலே போய்க் கொண்டிருந்தான்... அவன், "உம்முடைய ஆவியின் இரட்டிப்பான பங்கு தான் எனக்குத் தேவை" என்றான்.

"நீ கடினமானதைக் கேட்டிருக்கிறாய், ஆனால் என்னைக் கவனித்துக் கொண்டே இரு. நான் போகும் போது நீ என்னைக் கண்டால், அது உன்மேல் வரும்" என்றான்.

இப்பொழுது, அது எப்படி சபைக்கு மாதிரியாய் உள்ளது? ஒரு சமயம் அங்கே ஒரு - ஒரு வாலிபன் வந்து அல்லது ஸ்திரீ இயேசுவிடம் வந்து, "ஆண்டவரே, நீர் உம்முடைய இராஜ்யத்தில் வரும் போது, என் குமாரர்களில் ஒருவன் ஒரு பக்கத்திலும், ஒருவன் வலது பாரிசத்திலும், ஒருவன் இடது பாரிசத்திலும்

உட்கார்ந்திருக்கும்படி (அருள்செய்ய வேண்டும்)" என்றாள்.

"ஏன்," அவர், "நான் குடிக்கும் பாத்திரத்தில் (cup) உங்களால் குடிக்கக் கூடுமோ? (உபத்திரவங்கள், கசப்பான வண்டல்கள் (dregs), மரணம்)?" என்று கேட்டார்.

"கூடும்"

"நான் பெறும் ஸ்நானத்தை பெற உங்களால் கூடுமா?" என்றார்.

அவள், "ஆம், கர்த்தாவே?" என்றாள்.

அவர், "உங்களால் கூடும். ஆனாலும், வலது பாரிசத்திலும் இடது பாரிசத்திலும் (உட்கார்ந்திருக்கும்படி) அருளுவது என் காரியமல்ல" என்றார்.

இப்பொழுது, இயேசு, "... நான் சபைக்குச் செய்கிற கிரியைகளைத் (தானும் செய்வான்), இவைகளைப் பார்க்கிலும் பெரிய கிரியைகளையும் நீங்கள் செய்வீர்கள்" என்றார். இப்பொழுது, அது தரத்தில் (quality) பெரியவைகளாக இருக்க முடியாது. அது எண்ணிக்கையில் அதிகமாக இருக்க வேண்டும், ஏனெனில் அவர் இயற்கையை நிறுத்தினார், மரித்தவர்களை உயிரோடெழுப்பினார், வியாதியஸ்தர்களை சுகமாக்கினார். செய்யக்கூடிய

ஒவ்வொன்றையும் அவர் செய்து விட்டார். பாருங்கள்? மரித்தவர்களுக்கு திரும்ப ஜீவனைக் கொடுத்தார் மற்றும் ஒவ்வொன்றும். எனவே தரத்தில் செய்யக் கூடிய அதிகமான எதுவும் இருக்க முடியாது, ஆனால் எண்ணிக்கையில் அதிகமாக. "நான் என் பிதாவினிடத்திற்குப் போகிறபடியினால், நான் செய்கிற இந்தக் கிரியைகளை நீங்களும் செய்வீர்கள், இன்னும் அதிக கிரியைகளையும் (பெரிய கிரியைகளையும்) நீங்கள் செய்வீர்கள்."

23. இப்பொழுது, அந்த ஆசீர்வாதமானது வாக்களிக்கப்பட்ட பிறகு இந்த வாலிப போதகரை உங்களால் கற்பனை செய்து பார்க்க முடிகிறதா? அவன் சரியாக எலியாவின் மேல் எப்படியாக தன்னுடைய கண்களை வைத்திருந்தான். யாராவது ஒருவர், "எலியாவே, இங்கே நோக்கிப் பார்" என்று கூறியிருந்தாலோ, அல்லது இங்கே ஏதோவொரு கூச்சல் கேட்டிருந்தாலும், எலிசா தன்னுடைய கண்களை சரியாக எலியாவின் மேல் வைத்திருந்தான் என்று உங்களிடம் கூறுகிறேன். அவன் அந்த இரட்டிப்பான பங்கைத்தான் விரும்பினான்.

இன்றிரவு அந்த இரட்டிப்பான பங்கு உங்களுக்குத் தேவைப்பட்டால், உங்கள் கண்களை இயேசுவின் மீது வைத்திருங்கள். பிசாசு சொல்லுவதிலோ, குற்றங்கண்டுபிடிப்பவர்

சொல்லுவதிலோ, அவிசுவாசிகள் சொல்லுவதிலோ எந்தக் கவனமும் செலுத்த வேண்டாம். உங்கள் கண்களை கல்வாரியின் மீது வைத்து, "கர்த்தாவே, நீர் அதை வாக்களித்திருக்கிறீர்" என்று கூறுங்கள்.

24. அப்போது, ஒரு-ஒரு...?... ஒரு அக்கினி ரதமும் ரதங்களின் குதிரைகளும் கீழே வருகிறது - எலியா அதன்மேல் ஏறினான், அவன் மேலே பரலோகத்திற்குள் செல்கையில், தன்னுடைய சால்வையை அல்லது அது என்னவாக இருந்ததோ அதைக் கழற்றி, பின்னால் எலிசாவிடத்தில் எறிந்தான். எலிசா அந்த சால்வையைப் பிடித்து, அதை தன்னுடைய சொந்த தோள்களில் போட்டுக் கொண்டு, யோர்தானுக்கு நடந்து சென்றான். எலியா செய்த அதே காரியம், அவன் இரட்டிப்பான தன்னுடைய சால்வையை ஒன்றாக வைத்துக் கொண்டு, யோர்தானை அடித்து, "எலியாவின் தேவன் எங்கே?" என்றான். அவைகள் வெவ்வேறாய், இரண்டு கூறுகளாகப் பிரிந்தது.

எலிசா எட்டு மிகச்சிறந்த அற்புதங்களைச் செய்தான், எலியா செய்தான், எலிசாவோ பதினாறு மிகச்சிறந்த அற்புதங்களை தன்னுடைய நாட்களில் செய்தான்.

25. கவனியுங்கள், இப்பொழுது, எலியா மேலே போனது போல, இயேசு தம்முடைய ஆவியை

இரண்டு மடங்காக விசுவாசிகளுக்கு வாக்களித்தார்: "நான் செய்கிற கிரியைகளை நீங்களும் செய்வீர்கள்; அவைகளைப் பார்க்கிலும் பெரியவைகளையும் கூட." பெந்தெகோஸ்தே நாளில்... இயேசு பரலோகத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட நாளில் அவர் மேலே சென்ற போது, பெந்தெகோஸ்தே நாளில், அவரின் மேலிருந்த அதே பரிசுத்த ஆவி, சபையின் மீது மீண்டும் வருகிறது.

நான் இன்று வியக்கிறேன், பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைக் கொண்டிருப்பதாக உரிமைகோரும் ஜனங்கள், தாங்கள் தேவனுடைய ஆசீர்வாதங்களின் பாத்திரங்களின் ஓரங்களை முத்தமிடுவதாக உரிமை கோருபவர்கள், நாம் காரியங்கள் இந்தவிதமாகப் போவதைக் காணும் போது, நாம் எவ்வளவாக நம்முடைய சமாதானத்தைப் பற்றிக் கொண்டிருக்க முடியும்? நாம் அபிஷேகம் பண்ணப்படும் இந்த பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொண்டு, "இயேசு கிறிஸ்துவின் மேலிருந்த தேவன் எங்கே? ஆபிரகாம் ஈசாக்கு யாக்கோபின் தேவன் எங்கே? நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் மேலிருந்த தேவன் எங்கே?" என்று கூற வேண்டிய நேரம் இதுவே. அதுவே ஆசீர்வாதங்கள்.

# ஜூன் 3



*யோவான் 14:16-20*

16. நான் பிதாவை வேண்டிக்கொள்வேன், அப்பொழுது என்றென்றைக்கும் உங்களுடனேகூட இருக்கும்படிக்குச் சத்திய ஆவியாகிய வேறொரு தேற்றரவாளனை அவர் உங்களுக்குத் தந்தருளுவார்.

17. உலகம் அந்தச் சத்திய ஆவியானவரைக் காணாமலும் அறியாமலும் இருக்கிறபடியால் அவரைப் பெற்றுக்கொள்ளமாட்டாது; அவர் உங்களுடனே வாசம்பண்ணி உங்களுக்குள்ளே இருப்பதால், நீங்கள் அவரை அறிவீர்கள்.

18. நான் உங்களைத் திக்கற்றவர்களாக விடேன், உங்களிடத்தில் வருவேன்.

19. இன்னும் கொஞ்சக்காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்களோ என்னைக் காண்பீர்கள்; நான் பிழைக்கிறபடியினால் நீங்களும் பிழைப்பீர்கள்.

**20. நான் என் பிதாவிலும், நீங்கள் என்னிலும், நான் உங்களிலும் இருக்கிறதை அந்நாளிலே நீங்கள் அறிவீர்கள்.**



*செய்தி:* **அவர் உங்களை விசாரிக்கிறவர், மார்ச் 1, 1960**

55. மனிதனைத் தேற்றும்படி — அவனிடம் அன்பு காட்டும்படி தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், ஒரு நல்ல மனைவியை பெற்றிருக்கிற எந்த மனிதனும் அதை அறிந்திருக்கிறான்.

ஒரு நல்ல மனைவியைக் குறித்து ஏதோவொன்று உண்டு... ஒரு மனிதன் தன்னுடைய வியாபாரத்தில் அல்லது – அல்லது தன்னுடைய ஜீவியப் பாதையில் ஏற்பட்ட எதிர்பாராத முடிவால் வருத்தத்தோடு வீட்டிற்கு வரக்கூடும்; யாருமேயில்லையென்றோ, எந்த மருத்துவரும் இல்லையென்றோ கவலையில்லை...

56. அவ்விதமாகத்தான் எனக்கும் இருக்கிறது. நான் வெளி நாடுகளிலிருந்தோ அல்லது வேறு எங்கிருந்தாவது வரும் போது, நான் மிகவும் பதட்டமுள்ளவனாகவும், நிலைகுலைந்து போனவனாகவும், தூக்கத்தை இழந்தவனாகவும்

வரும்போது. பசியாயுள்ள சிறு பிள்ளைகள் தெருவில் அழுவதை நான் கேட்கிறேன், அவர்களை நான் பார்க்கிறேன், ஓ, அழுது கொண்டு செல்கிறார்கள், அது அப்படியே என்னைக் கொன்று விடுகிறது.

பிறகு நான் வீட்டிற்கு வரும்போது, என்னுடைய மனைவி இருக்கையின் கை பக்கத்தில் உட்கார்ந்து, தன்னுடைய கரத்தை என்னைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, “ஓ, பில், நான் – நான் அதை புரிந்து கொள்கிறேன், உங்களுக்குத் தெரியும்” என்று கூறுவாள்.

57. மனைவியிடமிருந்து வரும் சில தட்டிக் கொடுக்கும் சிறு காரியங்கள் அதிகமாக அர்த்தமுள்ளதாகும்; ஒரு கணவனுக்கும் மனைவியிடம் அதே காரியம் இருக்கிறது. அந்த விதமாகத்தான் அது இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

நாம் அதற்குப் பதிலாக ஏதோவொன்றை பதிலீடாகப் பெறும் போது, அந்த ஸ்தானத்தை எடுக்கும்படி முயற்சிக்க வேறு ஏதோவொரு ஸ்திரீயை நீங்கள் பெற்றுக் கொள்ளும் போது, அல்லது மற்ற ஏதோவொரு மனிதனை பெற்றுக்கொள்ளும் போது, நீங்கள் என்ன செய்கிறீர்கள் என்பதைப் பாருங்கள்.

58. இப்பொழுது, ஏன், அவர் நமக்கு நண்பர்களைத் தருகிறார். அவன் நேசிக்கிறான்... நாம் — நாம் நண்பர்களைக் கொண்டிருக்க வேண்டும். நமக்கு சகோதரர்கள் இருக்க வேண்டும்.

ஆபத்துக் காலத்தில் ஒரு நல்ல சிநேகிதனிடம் போய், "ஓ, என்னுடைய நண்பனே, குறிப்பிட்ட — குறிப்பிட்ட காரியம் சம்பவித்து விட்டது" என்று சொல்வதென்பது எவ்வளவு நன்றாக இருக்கும்.

ஒரு நல்ல, நம்பிக்கைக்கு பாத்திரமான நண்பன் உட்கார்ந்து உங்களிடம் பேசுவான், அது அற்புதமானது. அது தேவனுடையதாக உள்ளது. உங்கள் மனைவி அப்படியே தேவனுடையவளாக இருப்பது போலவும், உங்களுடைய கணவன் தேவனுடையவனாக இருப்பது போலவும். நீங்கள் உண்மையுள்ளவர்களாக இருக்கும் போது.

59. ஆனால் மனிதன் கூட தன்னுடைய விழுந்து போன சுபாவத்தைக் காண்பிக்க, அப்படிப்பட்டவைகளை அவனில் பெற்றிருக்கிறான், தேவன் அவனுக்குக் கொடுத்ததை அவன் சீரழிக்கிறான். முதலாவது காரியமாக, அவனுக்கு தேறுதலைக் கொடுப்பதற்காக பரிசுத்த ஆவிக்குப் பதிலாக அவன் (மது) புட்டியை அல்லது உலகத்தை எடுத்துக் கொள்கிறான்.

அவனுடைய ஜீவியத்தின் இன்ப துன்பங்களில் பங்கு கொள்ளும்படிக்கு தேவன் அவனுக்கு ஒரு மனைவியைக் கொடுக்கிறார், அவன் அவளுடன் திருப்தியடையாமல், மற்றொரு மற்றொருவளை அவன் பெற்றுக் கொள்ள வேண்டியுள்ளது; அது போலவே ஸ்திரீயும் வேறொருவனை பெற்றுக் கொள்கிறாள்; வாலிப ஜனங்களும் மற்றவர்களும் அவ்விதமே செய்கின்றனர்.

60. கர்த்தர் நமக்கு அருளியிருக்கிற இந்த எல்லா தேற்றரவாளர்களும் இருந்தும் கூட, பிரயாணத்தின் முடிவை அது அடையும் போது, காய்ச்சலால் பாதிக்கப்பட்ட நம்முடைய புருவத்தின் மீது ஒரு தலையணையை நாம் அழுத்தினவர்களாய், மரித்துக் கொண்டிருப்போம், நம்முடைய மனைவியானவள் தன்னுடைய முகத்தில் கண்ணீர் வடித்தவளாய், தேவனை நோக்கி அவளுடைய கண்களை உயர்த்தினவளாய் நின்று கொண்டிருக்க மாத்திரமே செய்ய முடியும். நம்முடைய நண்பனோ நம் தோளில் தட்டிக் கொடுத்தவனாய், நம்முடைய கரங்களைக் குலுக்கினவனாய், தன்னுடைய கைகளை பிசைந்து கொண்டு நின்று கொண்டிருக்கக் கூடும், ஏனெனில் அதற்கு மேல் அவனால் எதுவும் செய்ய முடியாது.

ஆனால் அச்சமயத்தில் அந்த தேற்றரவாளன் இருப்பாரானால், தாவீது சொன்னது போல, "ஆம், நான் மரண இருளின் பள்ளத்தாக்கில் நடந்தாலும்

பொல்லாப்புக்கு பயப்படேன். நீர் என்னோடு கூட இருக்கிறீர். மரண இருளின் பள்ளத்தாக்கிலும் கூட உமது கோலும் உம் தடியும் என்னைத் தேற்றும்" (என்று கூற இயலும்).

61. மனிதன் ஏன் தாகமுள்ளவனாயும் பசியுள்ளவனாயும் இருக்கிறான்? ஏனெனில் அவன் உண்டாக்கப்பட்ட போது, அவனைத் தேற்றரவு பண்ணும்படிக்கு தேவன் வாசம் பண்ணும்படியாக அவனுக்குள் ஒரு சிறு இடம் சிருஷ்டிக்கப்பட்டு, அவன் உண்டாக்கப்பட்டிருக்கிறான்.

அவன் பாவத்தின் காரணமாக தன்னைத்தான் உதறிக் கொண்டு, தேவனை விட்டு அப்பால் செல்லும் போது, அந்த இடம் வெற்றிடமாக இருக்கிறது. அதன் காரணமாகத்தான் அவன் அதற்காக – அதை அடைவதற்காக பசியாயிருக்கிறான்.

62. இன்று கிறிஸ்தவர்களாகிய நம்மிடமுள்ள பிரச்சனை என்னவெனில், நம்முடைய விழுந்து போன சகோதரனிடமுள்ள காரியம் என்னவென்று அவனிடம் காட்டுவதற்கு நம்மால் செய்யக்கூடிய எல்லாவற்றையும் நாம் செய்யாமல் இருக்கிறோமா என்று நான் அஞ்சுகிறேன். அவனோடுள்ள காரியம் அதுதான். வாலிப பருவத்தினரிடையேயுள்ள குற்றங்களுக்கான காரணம் அது தான், அதன் காரணமாகத்தான்

சபையில் குற்றங்கள் நடக்கின்றன, வீடுகளில் குற்றங்கள் நடக்கின்றன, அதுதான் இளம்பருவத்தினரை குற்றம்புரிய வைக்கிறது.

63. அதன் காரணமாகத்தான் நடத்தை கெட்டவர்களும் (beatniks) மற்றவர்களும் தெருவில் மேலும் கீழுமாக குதித்துக் கொண்டு, இந்த எல்லா காரியங்களையும் அதிகரிக்கச் செய்கின்றனர், ஏனெனில் அவர்களைத் திருப்திபடுத்துவதற்காக ஏதோவொன்றை கண்டுகொள்ள அவர்கள் முயற்சிக்கின்றனர்.

64. கர்த்தராகிய இயேசுவின் நாமத்தில் இன்றிரவு நான் இதைச் சொல்லட்டும்: பரிசுத்த ஆவியின் வல்லமை வருவது போன்று திருப்திபடுத்துவது எதுவுமில்லை. அது உங்களுடைய ஜீவியத்தையும் உங்களுடைய மனப்பான்மையையும் மாற்றி, உங்களுக்குத் தேற்றரவையும், நித்திய ஜீவனையும் கொடுக்கும்.

*இம்மானுவேலின் இரத்தத்தினால் நிறைந்த ஊற்று ஒன்றுண்டு*

*அங்கு பாவிகள் அந்த இரத்த வெள்ளத்தில் மூழ்கும் போது*

*தங்கள் எல்லா பாவக் கறைகளையும் போக்கிக் கொள்கின்றனர்*

65. ஒரு மனைவியானவள் தேற்றி முதுகில் தட்டிக் கொடுக்கலாம். ஒரு நண்பன் உட்கார்ந்து நல்ல ஆலோசனைகளை வழங்கலாம். ஆனால் பாவத்தை நீக்குவதற்கான ஒரே காரியம் மாத்திரமே உண்டு, அதுதான் கர்த்தராகிய இயேசுவின் இரத்தமாகும்.

*என்னுடைய பாவத்தை எதனால் நீக்கக் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை;*

*என்னை மீண்டும் சுகப்படுத்த எதனால் கூடும்?*

*இயேசுவின் இரத்தத்தைத் தவிர வேறொன்றுமில்லை.*

எழுத்தாளர் கூறுவது போல:

*ஓ, விலையேறப்பெற்ற நதி*

*அது பனியைப் போன்று என்னை வெண்மையாக்கும்;*

*வேறே நதியை அறியேன்,*

*இயேசுவின் இரத்தம் தானே.*

66. அதுதான் அது. அது சுத்தப்படுத்தி, தூய்மையாக்கி, ஐக்கியத்தில் கொண்டு வந்து

சேர்க்கிறது, “இன்னும் கொஞ்சக் காலத்திலே உலகம் என்னைக் காணாது, நீங்கள் என்னைக் காண்பீர்கள்; உலகத்தின் முடிவுபரியந்தம் நான் (தனிப்பட்ட பிரதிபெயர்) உங்களுடனே, உங்களில் கூட இருக்கிறேன். பரிசுத்த ஆவியாகிய அவர் வந்திருக்கும்போது, அவர் வரும் போது, பிதா என்னுடைய நாமத்தில் தேற்றரவாளனை அனுப்புவார். அவர் வரப்போகிற காரியங்களை உங்களுக்கு காண்பிப்பார், காரியங்களை உங்களுக்கு நினைப்பூட்டுவார்.” எப்போது? நாம் கிறிஸ்து இயேசுவில் உன்னதங்களில் ஒன்றாக உட்கார்ந்து கொண்டிருக்கும் போது — பரிசுத்த ஆவியானவர் வார்த்தையின் வழியாக கீழிறங்கி வந்து, தேற்றி, ஆறுதலைக் கொடுக்கிறார்.

# ஜூன் 4



*ஏசாயா 66:13*

**13. ஒருவனை அவன் தாய் தேற்றுவதுபோல் நான் உங்களைத் தேற்றுவேன்; நீங்கள் எருசலேமிலே தேற்றப்படுவீர்கள்.**

52. யாரோ ஒருவர், "நீர் உயிர்த்தெழுதலின் பேரில் மிக அதிகமாகப் பிரசங்கம் பண்ணுகிறீரே. பெரும்பாலும் எல்லா செய்திகளுமே உயிர்த்தெழுதலைக் குறித்த ஏதோவொன்றைக் கொண்டிருக்கிறது" என்றார்.

53. ஏன், நிச்சயமாக! அது-அது சுவிசேஷத்தின் முக்கிய இளைப்பாறும் ஸ்தலமாக உள்ளது. ***அவர்*** (இயேசு - மொழிபெயர்ப்பாளர்.) என்ன செய்திருந்தாலும் காரியமில்லை, அவர் மீண்டும் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்திராவிட்டால், இவை அனைத்துமே வீணாயிருக்கும். அவர் தேவன் என்பதை அது எனக்கு நிரூபிக்கிறது. அவர் உரிமை கோரிய ஒவ்வொரு உரிமையையும் அது நிரூபிக்கிறது: அந்த உயிர்த்தெழுதல்! மேலும் அது ஆத்துமாவின் இளைப்பாறும் ஸ்தலமாகவும் உள்ளது. அதுவே பிரயாணம் துவங்கும் இடமாக உள்ளது. அது நம்முடைய ஆறுதலின் முடிசூட்டுதலாக உள்ளது.

54. அவர் மரித்தோரிலிருந்து உயிர்த்தெழுந்ததை நாம் காணும்போது, யுத்தம் செய்வதற்கான ஸ்தானத்தை எடுத்துக்

கொள்ளும்படிக்கு, அது நம்மை சுவிசேஷ போர் கவசங்களோடு யுத்த களத்தின் முன்னணியில் வைக்கிறது. அவர், "என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் மீண்டும் அதைக் காத்துக் கொள்வான் (மத்தேயு 10:39)" என்று கூறினார் என்பதை நாம் அறிவோம்.

55. அது முழு சுவிசேஷத்தின் மகத்தான முடிசூட்டு விழாவாக இருக்கிறது என்று நினைக்கிறேன், அதுதான் உயிர்த்தெழுதல், அதில் நம்பிக்கையாயிருப்பவர்களுக்கு அது கொடுக்கிற அதன் தெய்வீக வாக்குத்தத்தங்களும், அந்த ஆறுதலும் அவ்வாறே இருக்கிறது. அது மீண்டும் நாம் ஒன்றாக சேர்க்கப்படுதலைக் குறித்த மகத்தான சந்திப்பை வாக்குப்பண்ணுகிறது. சகல பாவங்களும் மங்கி மறைந்து போய் விடும் என்பதை அது வாக்குப்பண்ணுகிறது. இதில் நாம் கொண்டிருந்த எல்லா குறைபாடுகளும் எல்லா வேதனைகளும் மறைந்து போய் விடும் என்பதை அது வாக்குப்பண்ணுகிறது. இந்த ஜீவியத்தில் நாம் இதனூடாகக் கடந்து செல்ல வேண்டியிருந்தது, அதன்பிறகு நம்முடைய எல்லாமே மறைந்து போய் விடும் என்று அது வாக்குப்பண்ணுகிறது. மரணமும் கூட தன்னுடைய பிடியை விட்டு விடும் என்று அது வாக்குப்பண்ணுகிறது, நாம் இயேசுவின் சாயலில் (likeness)

உயிர்த்தெழுவோம். எனவே, என்னுடைய அபிப்ராயத்தின்படி, வேதவாக்கியத்திலுள்ள எல்லா வாக்குத்தத்தங்களிலும் உயிர்த்தெழுதலே பெரிய வாக்குத்தத்தமாக இருக்கிறது. அங்கே தான் அது முத்திரையிடப்பட்டுள்ளது.

56. கடந்த ஈஸ்டரின் போது, நான் ஐந்து காரியங்களின் பேரில் பிரசங்கித்துக் கொண்டிருந்தேன்...

*அவர் உயிரோடிருந்து என்னை நேசித்தார்; மரித்து என்னை இரட்சித்தார்;*

*அடக்கம் பண்ணப்பட்டு, அவர் என் பாவங்களை சுமந்து தொலைவில் அகற்றினார்;*

*உயிரோடெழுந்து இலவசமாக என்னை என்றென்றைக்குமாக நீதிமானாக்குகிறார்.*

57. அதுதான் எனக்கான நாள், நாட்களில் எல்லாம் மகத்தான நாள் அதுவே! நாட்களிலெல்லாம் ஆசீர்வதிக்கப்பட்ட அந்த நாளுக்காக நாம் பிரசவ வேதனைப்பட்டு, காத்துக் கொண்டிருக்கையில், அந்த உயிர்த்தெழுதல் நம் எல்லாருக்கும் எவ்வளவு முக்கியமானதாக இருக்கும் என்பதைப் பார்க்கும் போது!

58. ஏதோவொரு நாளில், இந்த வயது சென்ற பெலவீனமான, மெலிந்த, தலை நரைத்த, வலுவிழந்த தாய்மார்கள் மறுரூபமடைவார்கள் என்ற வாக்குத்தத்தத்தை அது நமக்குக் கொடுக்கிறது. அங்கே அமர்ந்திருக்கும் தாய் மட்டுமல்ல, அவள் மட்டுமல்ல, அவளோடு கூட அவளுடைய முழுக் குடும்பமும் மறுரூபமாகி விடும்.

59. அந்த நாள் எப்படிப்பட்ட ஒரு நாளாக இருக்கும்! நாம் மிகவுமாக நேசித்த அந்த முகங்களை நாம் காணும்போது, அது என்னவொரு நேரமாக இருக்கும். அந்தக் காலையில், நாம் நம்முடைய அன்பார்ந்தவர்களைக் கண்டு, அவர்கள் அப்போது எப்படியிருப்பார்கள் என்பதைக் கவனிக்கும் போது, அது என்னவொரு வித்தியாசமாக இருக்கும். அப்போது எல்லா சஞ்சலங்களும் நீங்கிப் போய் விடும். கடினமான துன்பங்கள் எல்லாம் சரியாகி விடும். மரணத்தின் வெளிறிப்போன கன்னங்கள் அதற்கு மேலும் இருக்காது. கண்களிலிருந்து சொரியும் கண்ணீர் அதற்கு மேல் இருக்காது. உயிர்த்தெழுதலானது அவை எல்லாவற்றையுமே வாக்குப்பண்ணுகிறது. அங்கே அடக்க ஆராதனைகள் அதற்கு மேலும் இருக்காது. ஈமச்சடங்குகளைச் செய்பவர் (undertaker) மரித்த சரீரத்திற்குத் தைலமிட்டு,

அதை வெளியே இழுத்து, அது இயற்கையாக தோற்றமளிக்கும்படி அதற்கு வர்ணம் தீட்டவும் மற்ற காரியங்களைச் செய்யுமிடத்தில் வைக்கப்பட்டிருக்கும் ஒரு துண்டு கல்லைப் போல குழந்தையின் கன்னத்தில் தட்டிக் கொடுப்பது அதற்கு மேலும் இருக்காது. அது அங்கே மீண்டும் ஒருபோதும் தேவைப்படாது.

60. அப்போது, அங்கே நின்று கொண்டிருக்கும் நம்முடைய அன்பார்ந்தவர்களையும், நம்முடைய தாய்மார்களையும், நம்முடைய இனஜனபந்துக்களையும் (kindred), நம்முடைய நண்பர்கள் எல்லாரையும் காணும் அந்த வேளையைக் குறித்து நான் எண்ணிப்பார்க்கிறேன்; நாம் அவர்களை அவர்களுடைய அழியாமையின் சரீரங்களிலும், அவர்களுடைய வானத்திற்குரிய சரீரங்களிலும் கண்டு, அவர்களுடைய குணாதிசயத்தைக் கவனித்து, அவர்கள் எப்படியாக தங்கள் இனிமையோடும், அமரிக்கையோடும் நடந்து கொள்கிறார்கள் என்பதைக் காணும்போது. அதற்கு மேலும் பதட்டமோ அல்லது ஏமாற்றங்களோ இருக்காது. அவர்கள் அப்போது கர்த்தராகிய இயேசுவின் சாயலில் நின்று கொண்டிருப்பதைக் காணும்போது, அது ஒரு அற்புதமான நாளாக இருக்கும்.

61. நாம் அவர்களை சந்திக்கும் அந்த ஆறுதலின் வேளைக்காக நாம் ஒவ்வொருவரும் நம்முடைய உள்ளங்களில் அதை எதிர்நோக்கியவர்களாய் ஏங்கிக் கொண்டிருக்கிறோம். ஒவ்வொருவரும் தங்கள் அன்பார்ந்தவர்களைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறார்கள், ஒருக்கால் மரித்துப் போய்விட்ட தங்கள் தாயைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கலாம். நீ மீண்டும் அவளைக் காணும்போது, அது எப்பேர்ப்பட்ட ஒரு நாளாக இருக்கும்! அப்பாவுக்கும், சகோதரனுக்கும், அன்பார்ந்தவர்கள் எல்லாருக்கும் அது எப்பேர்ப்பட்ட ஒரு நாளாக இருக்கும்...

# ஜூன் 5

 *நீதிமொழிகள் 31:26-29*

**26. தன் வாயை ஞானம் விளங்கத் திறக்கிறாள்; தயையுள்ள போதகம் அவள் நாவின்மேல் இருக்கிறது.**

**27. அவள் சோம்பலின் அப்பத்தைப் புசியாமல், தன் வீட்டுக்காரியம் எப்படி நடக்கிறது என்று கண்ணோக்கமாயிருக்கிறாள்.**

**28. அவள் பிள்ளைகள் எழும்பி, அவளைப் பாக்கியவதி என்கிறார்கள்; அவள் புருஷனும் அவளைப் பார்த்து:**

**29. அநேகம் பெண்கள் குணசாலிகளாயிருந்ததுண்டு; நீயோ அவர்கள் எல்லாருக்கும் மேற்பட்டவள் என்று அவளைப் புகழுகிறான்.**

*செய்தி:* **தாய்மார்களின் தினம், மே 10, 1959**

62. இப்பொழுது, நானும் கூட சிந்தித்துக் கொண்டிருக்கிறேன். நான் என்னுடைய குடும்பத்தினரைக் குறித்து சிந்தித்துக் கொண்டிருக்கிறேன், அந்த நாள் எனக்கு எவ்வளவு முக்கியம் வாய்ந்ததாய் இருக்கும்.

63. அநேகமாக அந்த உயிர்த்தெழுதல் காலையில் என்னை முதலாவது சந்திக்க வருவது என்னுடைய சிறு ஷாரோனாயிருக்கும் (Sharon) என்று நினைக்கிறேன். இல்லை, அவள் நடுங்கிக் கொண்டிருக்க மாட்டாள். அந்தப் பிசாசு அவ்விடத்தில் நுழைய முடியாது. எந்த மூளைக்காய்ச்சலும் அந்த தேசத்தை ஒருபோதும் தொடவே முடியாது. அவள் என்னைப் பார்த்து, போய் வருகிறேன் (good-bye) என்று

கையசைக்க மாட்டாள். அவள் தன்னுடைய கரங்களை (என்மேல்) போட்டுக் கொண்டு, "அப்பா!" என்று உரத்த சத்தமிடுகையில், அந்தச் சிறு நீலநிற கண்கள் பளிச் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும். நான் அவளைக் கண்டு, அவள் மீண்டும் ஒருபோதும் மரிப்பதில்லை என்பதை அறிந்து கொண்டு, அதெல்லாம் முடிந்து விட்டது என்பதை அறிந்து கொள்ளும் போது, மகிழ்ச்சியடைவேன், அதனால் தான் நான் உயிர்த்தெழுதலைக் குறித்து மிகவும் கடினமாகப் பிரசங்கித்தேன்.

64. அதன்பிறகு நான் அவளுடைய தாயாரைக் காண்பேன், அது என்னுடைய மகன் பில்லியின் தாயார். நான் தொடர்ந்து நீண்ட நேரமாக அங்கே அதைக் குறித்த நினைவுகளை அதிகமாக நினைத்துக் கொண்டிருக்கிறேன். இங்கே மேலேயிருக்கும் திரு. காம்ப் அவர்களைக் கொண்டு, நான் அவளைத் தூக்கிக் கொண்டு வந்ததை நினைவுகூருகிறேன், அவர் கடைசியாக அவளை வைத்து ஓட்டிக் கொண்டு வந்து கொண்டிருந்தார், நான் அவளைத் தொடர்ந்து ஒரு காரில் சென்று கொண்டிருந்தேன்.

65. நாங்கள் அங்கே ஏழாவது தெருவில் போன போது, 18 மாத (குழந்தையாகிய) பில்லியை அவர்கள் எப்படியாக வெளியே தெருவில்

கொண்டு வந்து, அவள் அவனைக் காணும்படி செய்தார்கள். அவள் படுத்துக் கொண்டே கதறி அழுதபடி அவளுடைய குழந்தையை உற்று நோக்கினாள், ஆனால் அவளால் அவன் அருகில் போக முடியவில்லை.

66. அதன்பிறகு ஈமச்சடங்கு பொறுப்பாளர் (undertaker) சாலையினூடாக வந்து, ஏழாவது தெருவுக்குப் போனார். அந்நேரத்தில் இங்கிருக்கும் அம்மா தான் அவனைக் கவனித்துக் கொண்டிருந்தார்கள், அவன் ஒரு ஜோடி சின்னஞ்சிறு குட்டையான காற்சட்டைகளை (pants) அணிந்தபடி, ஒரு சிறு சிவப்பு நிற தொப்பியை பக்கவாட்டில் இழுத்தபடி அவனுடைய தலையில் அணிந்து கொண்டும் வெளியே முற்றத்தில் நின்று கொண்டிருந்தான். அந்தத் தாய் அந்த ஆம்புலன்ஸின் பின்பகுதியில் இருந்த அக்கட்டிலின் மேல் படுத்தபடி என்னைக் கவனித்துக் கொண்டிருந்தாள், அவள் தன்னுடைய பிள்ளை முற்றத்தில் நின்று கொண்டிருப்பதைக் கண்ட போது, அவள் தன்னுடைய கடைசி பிரயாணத்தைச் செய்து கொண்டிருக்கிறாள் என்பதை அறிந்து, அவள் அந்தக் கட்டிலிலிருந்து எழுந்து உரத்த சத்தமிட்டு, முற்றத்தில் இருந்த தன்னுடைய பிள்ளையை நெஞ்சார அணைத்துக் கொள்ளும்படி எலும்பும் தோலுமாயிருந்த

தன்னுடைய கரத்தை வெளியில் போட்டாள். ஆனால் அவளால் அவனை அணைத்துக் கொள்ள முடியவில்லை.

67. ஓ, அந்நாளில் அவளைக் காண்பது சந்தோஷமாக இருக்குமே. இல்லை, அவள் எலும்பும் தோலுமான கரங்களைக் கொண்டிருக்க மாட்டாள், அந்தக் கன்னங்கள் மூழ்கிப் போவதுமில்லை. ஆனால் அவள் வானத்தின் ஒரு இராணியாக (a queen of heaven), ஒரு தாயாக, தெய்வீக அழகைக் கொண்டவளாய் நிற்பாள். அவளுடைய கறுத்த கண்கள், அண்டங்காக்கைகளின் சிறகுகளைப் போன்று அவ்வளவு கறுப்பாயிருந்து, சந்தோஷத்தால் பளிச் பளிச்சென்று பிரகாசித்துக் கொண்டிருக்கும். அவள் சரீரம் எல்லாம் கூனிப் போகாது, அங்கே அந்த காசநோய் பிசாசு ஒருபோதும் அந்த தேசத்திற்குள் நுழைவதில்லை, ஆனால் அவள் அழிவில்லாதவளாய் அவருடைய சாயலில் நிற்பாள்.

68. அதன்பிறகு, அடுத்ததாக என்னைச் சந்திக்க வருவது எட்வர்ட்டாக இருக்கும் என்று நினைக்கிறேன், நாங்கள் அவனை “ஹம்பி” என்று சுருக்கமாக அழைப்போம். பிரன்ஹாம் குடும்பத்தின் ஒன்பது பெரிய இணைப்பு சங்கிலிகளில் அவன் தான் முதலாமவன் ஆவான்.

உடைக்கப்பட்டு போன முதலாவது இணைப்பு அவன் தான்; அவன் எனக்கு அடுத்தவன். எட்வர்ட் என்னை நோக்கி ஓடி வருவதை நான் காண்பேன். அவன் 19 வயதில் ஒரு இளைஞனாக மரித்த போதிலும். நான் அவனுடைய கரத்தைப் பற்றிப்பிடிக்கும்போது, நாங்கள் சிறு பையன்களாய் இருந்த போது நடந்தவைகளைக் குறித்துப் பேசுவதற்கு எங்களுக்கு அதிக காரியங்கள் இருக்கும் என்பதில் நிச்சயமுடையவனாயிருக்கிறேன், ஏனென்றால் நாங்கள் சிநேகிதர்களாயிருந்தோம், நாங்கள் ஒன்றாக ஒட்டிக் கொண்டிருந்தோம். உண்மையான சகோதரர்கள் செய்வதைப் போன்று, நான் அவனுடைய சூட்டையும் காரியங்களையும் அணிந்து கொள்ள அவன் அனுமதிப்பான். நான் அவனை மீண்டும் காணும்போது, அது ஒரு சந்தோஷமாயிருக்கும்.

69. அவன், "பில்லி, என்னுடைய செய்தி உனக்குக் கிடைத்ததா? நான் இவ்வுலகத்தை விட்டுப் போய்க் கொண்டிருந்த சமயத்தில், நீ ஒரு கால்நடைப் பண்ணையில் வேலைபார்த்துக் கொண்டிருந்தாய். ஆனால் நான் மருத்துவமனையில் இருந்தபோது, 'எல்லாமே சரியாக உள்ளன என்று பில்லியிடம் கூறி விடுங்கள்' என்று நான் செய்தி

அனுப்பியிருந்தேனே" என்று இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதை நான் கேட்பேன்.

நானோ, "ஆமாம், அந்தப் பரந்த புல்வெளியில் இருக்கும்போது, உன்னுடைய செய்தி எனக்குக் கிடைத்தது" என்று கூறுவதற்கு மகிழ்ச்சியாயிருப்பேன்.

# ஜீன் 6



*நீதிமொழிகள் 1:8-9*

**8. என் மகனே, உன் தகப்பன் புத்தியைக் கேள், உன் தாயின் போதகத்தைத் தள்ளாதே.**

**9. அவைகள் உன் சிரசுக்கு அலங்காரமான முடியும், உன் கழுத்துக்குச் சரப்பணியுமாயிருக்கும்.**



*செய்தி:* **தாய்மார்களின் தினம், மே 10, 1959**

70. அதன்பிறகு, அடுத்ததாக வருவது என்னுடைய தகப்பனாராக இருக்கும் என்று நினைக்கிறேன். அறுந்து போன அடுத்த இணைப்பு அவர் தான். இல்லை, அடுத்த இணைப்பு சார்லஸ் என்று நினைக்கிறேன், அவன் ஒரு வாலிப சகோதரனாயிருந்தான்.

71. அவன் வெறுமனே ஒரு சிறு பையனாயிருந்த போது, அவனுக்கு ஒரு மோட்டார் வாகன விபத்து ஏற்பட்டது. அவன் எப்போதுமே நடக்கும்போது, அவனுடைய வலது காலை இழுத்து இழுத்து நடப்பான். ஆனால், உங்களுக்குத் தெரியும், நான் அவனைக் காணும்போது, அவன் அந்தக் காலை இழுத்து வைத்து நடக்க மாட்டான். அதெல்லாம் சரியாகி, ஒரு வாலிப மனிதனின் மகிமையோடு நின்று கொண்டிருப்பான்.

72. அவன் புன்சிரிப்போடு இவ்விதமான ஏதோவொன்றை என்னிடம் கூறுவான். அவன், "ஆமாம், பில்லி, இங்கே எந்த விபத்துமேயில்லை. எனக்கு மோட்டார் வாகன விபத்து ஏற்பட்டதற்கு முந்தின இரவு எனக்கு ஞாபகம் இருக்கிறது, அன்று இரவு நீ என்னிடம் பேசினாய், அப்போது நம்முடைய சிறிய தாழ்மையான வீட்டின் சிறு வளைவு பகுதியில் நின்று கொண்டிருந்தாய்" என்று கூறுவான், நான் இப்பொழுதே அதன் உச்சியை கவனித்துக் கொண்டிருக்கிறேன். "நான் போவதற்கு ஒரு சில மணி நேரங்களுக்கு முன்பு, நீ கர்த்தரைக் குறித்து என்னிடம் பேசினாய். நான் போகும்போது, நீ பிரசங்க பீடத்தில் இருந்து பிரசங்கித்துக் கொண்டிருந்தாய்" என்று கூறுவான்.

73. அதன்பிறகு அப்பா வருவார். ஓ, நான் அவரைக் காணலாம். அவர் எனக்கு அதிக கடினமான சவுக்கடிகளைக் கொடுத்த போதிலும், சரியாக அதுதான் எனக்குத் தேவையாயிருந்தது. ஆனால் நான் அடர்த்தியான அந்தக் கருமையான அலையலையான முடியைக் காண்பேன், எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் அவர் அந்நாளில் அதிகப் பிரகாசமாக இருப்பார். அவர் என்னை நோக்கிப் பார்த்து, "என் மகனே, உனக்குத் தெரியும், அப்பா அவருடைய பிள்ளைகளைப் போஷிக்கும்படி இனிமேல் ஒருபோதும் பசியோடு மேஜையை விட்டு எழுந்திரிக்க மாட்டார், இங்கே எங்களுக்கு நிறைய உள்ளது. இங்கே ஒருபோதும் வறுமையே இருப்பதில்லை" என்பார்.

74. அவரைக் காணும்போது, அவர் ஒரு நாளைக்கு ஐம்பது அல்லது 75 சென்ட் காசுகளுக்கு (cents) வேலை செய்து, பிள்ளைகள் சாப்பிட வேண்டுமென்று (சாப்பாட்டு) மேஜையை விட்டு எழுந்து, மீண்டும் வேலைக்குத் திரும்பிச் செல்வார்... அவருடைய சட்டையின் பின்பக்கம் அதிகமாக சூரிய ஒளி பட்டதினால் எரிந்து போகும் அளவுக்கு அவர் மிகவும் கடினமாக வேலை செய்தார், அம்மா அதை ஒரு கத்தரிக்கோலைக் கொண்டு வெட்டுவார்கள்.

75. அவர் இவ்விதமாக ஏதோவொன்றைக் கூறுவதைக் நான் கேட்பேன், “பில், நான் மரித்துக் கொண்டிருந்த போது, நீயும் சகோதரன் ஜார்ஜ்-ம் எனக்காக ஜெபிக்க வந்த அந்த இரவு உனக்கு ஞாபகம் உள்ளதா? இரண்டு வெண்ணிற தூதர்கள் படுக்கைக்கு அருகில் நின்று கொண்டிருக்கிறார்கள் என்றும், கால்பக்கத்தில் ஒரு சிவப்பு நிற தூதன் நின்று கொண்டிருக்கிறான் என்றும் நான் அம்மாவிடம் கூறினேன் என்று உனக்குத் தெரியும். சிவப்பு நிற தூதன் என்னைப் பிடிக்க முயற்சித்துக் கொண்டிருந்தான், ஆனால் அந்த வெண்ணிற தூதன் இடையே நின்றானே. கடைசியாக அவர்கள் என்னை வீட்டிற்குக் கொண்டு சென்றார்களே” என்று கூறுவார்.

76. மேலும் அதன்பிறகு, அறுந்து போன அடுத்த இணைப்பு, அல்லது மரித்துப் போன ஹவார்டு வருவான். நான் ஹவார்டைக் காண்பேன்; நாங்கள் அத்தேசங்களில் ஒன்றாக நெருங்கிய நண்பர்களைப் போல வசித்த போது, எல்லாவிடங்களிலும் அவன் ஒரு ஊழியக்காரன் என்று அழைக்கப்பட்டான், அவனுக்கு பெரிய தனித்தன்மை (personality) இருந்தது, ஆனால் அவனுடைய கூட்டாளிகள் அவனை நிராகரித்து விட்டனர். நான் அவனிடம் பேசின கடைசி

வார்த்தை, அவன், "நான் போகும் போது, பில்..." என்றான்.

77. அவன் மரித்துப் போவதற்கு ஏறக்குறைய நான்கு வருடங்களுக்கு முன்பு, ஒரு தரிசனத்தின் மூலம், அவன் மரித்துப் போவதை நான்-நான் கண்டேன். பாப் (Pop) அவர்கள் அவனுடைய கல்லறையை அடையாளமிடுவதை நான் கண்டதாக அவனிடம் கூறி, அதுதான் அடுத்தது என்று கூறினேன்.

78. அவனோ, "நீ எனக்காக செய்ய வேண்டும் என்று நான் விரும்புகிற ஒரு காரியம் உண்டு. நான் என்னுடைய ஜீவியத்தை ஒழுங்கீனமாகக் குழப்பி விட்டிருக்கிறேன். நான் விவாகம் செய்தும் மற்றும் ஒவ்வொரு காரியத்தையும் செய்தும் இருக்கிறேன். என்ன நடந்தது என்றே எனக்கு-எனக்குத் தெரியவில்லை" என்றான்.

நான், "ஹவார்டு, நீ அவரை விசுவாசிக்கிறாயா?" என்று கேட்டேன்.

79. அவன், "எனக்குள் இருக்கிற எல்லாவற்றைக் கொண்டும் நான் அவரை விசுவாசிக்கிறேன்" என்றான். அவன் போவதற்கு ஏறக்குறைய இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு முன்பு, அவன் தேவனோடு சமாதானம் செய்து கொண்டான், சகோதரன் நெவிலும், அவர்களும்

அங்கே இருந்தார்கள். அவன், “நீ ஒரு காரியத்தை செய்ய வேண்டுமென்று நான் விரும்புகிறேன். பில்லி, நான் போகும்போது, அவர்கள் எனக்காக, **‘அவர் புரிந்து கொண்டு, “நன்றாய் செய்தாய்” என்று கூறுவார்’** என்ற பாடலைப் பாட வேண்டும்” என்றான்.

80. நான் ஹவார்டின் கரத்தைக் குலுக்குவதற்கு முன்பு என்று நம்புகிறேன், அவன் நிறுத்தி விட்டு, என்னை நோக்கிப் பார்த்து, “பில்லி, அவர் புரிந்து கொண்டார்” என்று கூறுவதை நான் கேட்பேன்.

# ஜூன் 7



*நீதிமொழிகள் 22:6*

**6. பிள்ளையானவன் நடக்கவேண்டிய வழியிலே அவனை நடத்து; அவன் முதிர்வயதிலும் அதை விடாதிருப்பான்.**



*செய்தி:* **தாய்மார்களின் தினம், மே 10, 1959**

81. அதன்பிறகு, சகோதரன் சிவார்டும், சகோதரன் ஃபிராங்க் பிராயும், சகோதரன் ஜார்ஜ் டீ ஆர்க்கும் வருவார்கள். ஓ, உயிர்த்தெழுதல் எனக்கு மிக முக்கியமானது. அந்த மகத்தான

முடிசூட்டப்படும் வேளைக்காக நான் எதிர்நோக்கிக் கொண்டிருக்கிறேன். அதன்பிறகு வெளிச்சமானது பரவத் துவங்கும் போது, நாம் அறியப்பட்டிருக்கிறபடியே அறிந்துகொள்ளுவோம். நாம் புரிந்து கொள்வோம், நமக்கு அறிமுகமானவர்களையும், அங்கேயிருப்பவர்களையும் நாம் நினைவுகூருவோம்.

82. மேலும் அநேகர் அங்கேயிருப்பார்கள் - அங்கே இருப்பார்கள் என்று நாம் நினைத்துக் கூட பார்த்திராத அநேகரும் அங்கேயிருப்பார்கள். "தொல்லைகளுக்குட்பட்ட மனிதத் தண்ணீர்களின் (human troubled waters) மேல் போடப்பட்ட ஆகாரம் அந்நாளில் நம்மிடம் திரும்பி வரும்" என்று நான் விசுவாசிக்கிற அந்நேரம் அதுவாக இருக்கும் என்று உங்களுக்குத் தெரியும். ஜனங்கள் மேலுள்ள நம்முடைய சாட்சியைக் கேட்பவர் உள்ளத்தில் ஏற்படும் விளைவைப் பொறுத்து அவர்களுடைய நடவடிக்கை என்னவென்பதை நாம் புரிந்து கொள்ளாமல் இருப்பதை நாம் காணும் போது, அவர்கள் அங்கேயிருப்பது சாத்தியம் தான். அது என்னவொரு நாளாக இருக்கும்!

83. மேலும், அப்போது, நாம் விதைத்த விதைகள், அவர்கள் என்ன ஆவார்கள் என்று நினைத்துக்கூட பார்த்திருக்க மாட்டோம், ஆனால்

இதோ அவர்கள் இருக்கிறார்கள். அவர்கள் விலையேறப்பெற்ற கனிகளைத் தந்தார்கள், நாம் அந்நாளில் அவர்களைக் காண்போம், கீழ்ப்படியாத பிடிவாதமுள்ள (wayward) அன்பார்ந்தவர்களையும், உறவினர்களையும் நாம் அந்நாளில் காண்போம்.

84. மனந்திரும்பினவர்களாய் நான் கண்ட ஆயிரக்கணக்கானோர்களைக் குறித்து எண்ணிப்பார்க்கிறேன், ஆம், இப்பொழுது மில்லியன் கணக்கானோர் (இலட்சக்கணக்கானோர், 1 மில்லியன் என்பது 10 இலட்சமாகும் - மொழிபெயர்ப்பாளர்) மனந்திரும்பிக் கொண்டிருக்கிறார்கள், அவர்களின் ஊழியம் என்னவாக இருந்தது. ஓ, அது ஒரு உயிர்த்தெழுதலைக் காட்டிலும் அதிகமான பேரை எடுத்துக் கொள்ளும். சுற்றிலும் போய் கரங்களைக் குலுக்கவும், நான் இப்பொழுது அறிந்திராத காரியங்களை அறிந்து கொள்ளவும் ஒரு நித்தியத்தையே அது எடுத்துக் கொள்ளும்.

85. நீங்கள் இன்று அந்த வெள்ளை நிற மலர்களை அணிந்திருக்கிறீர்கள், அந்த வயதான தலைநரைத்த தாய்மார்கள் அங்கே அழகானவர்களாய் இருப்பார்கள், அவர்கள் உங்களைக் காண்பார்கள். ஒரு மலர் கூடையைக் (pot of flowers) கொண்டு குறிப்பிட்டுக்

காட்டுவதோ, அல்லது ஒரு வயதான தலைநரைத்த நபருடைய ஏதோவொரு படத்தைக் கொண்டு குறிப்பிட்டுக் காட்டுவதோ அல்ல; ஆனால் அவர்கள் உயிர்த்தெழுதலின் சாயலிலும் அழகிலும் அங்கேயிருப்பார்கள், அவர்கள் கிறிஸ்துவின் சாயலில் அவர்களுடைய வானத்துக்குரிய சரீரங்களைக் கொண்டவர்களாய் (celestial bodies), என்றென்றுமாக வாலிப வயதினர்களாகவும் அழகானவர்களாகவும் அங்கே நிற்பார்கள். நிச்சயமாக, அதுதான் இளைப்பாறுதல். நான் அந்த தாய்மார்களின் தினத்துக்காகத்தான் காத்துக் கொண்டிருக்கிறேன். அதுவே முடிசூட்டு விழா. மேற்சட்டையின் (கோட்) முன்புறத்திலுள்ள மடித்து விடப்படும் பகுதியைக் (lapel) கொண்டுள்ள முடிசூட்டு விழா அல்ல, ஆனால் தேவன் அவளை மறுரூபப்படுத்துவதற்காக, ஆத்துமாவின் முடிசூட்டு விழா.

# ஜூன் 8



*நீதிமொழிகள் 23:22-25*

**22. உன்னைப் பெற்ற தகப்பனுக்குச் செவிகொடு; உன் தாய் வயதுசென்றவளாகும்போது அவளை அசட்டைபண்ணாதே.**

**23. சத்தியத்தை வாங்கு, அதை விற்காதே; அப்படியே ஞானத்தையும் உபதேசத்தையும் புத்தியையும் வாங்கு.**

**24. நீதிமானுடைய தகப்பன் மிகவும் களிகூருவான்; ஞானமுள்ள பிள்ளையைப் பெற்றவன் அவனால் மகிழுவான்.**

**25. உன் தகப்பனும் உன் தாயும் சந்தோஷப்படுவார்கள்; உன்னைப் பெற்றவள் மகிழுவாள்.**

*செய்தி:* **தாய்மார்களின் தினம், மே 10, 1959**

86. வயதாகி, வலுவிழந்து, முடக்கு வாதத்தினால் நடுங்கிக் கொண்டிருக்கும் என்னுடைய வயதான தாயை நான் எண்ணிப் பார்க்கிறேன். அவர்கள் அந்நாளில் அவ்வாறு இருக்க மாட்டார்கள். அது அப்போது வித்தியாசமாக இருக்கும். நாம் சுற்றுமுற்றும் நோக்கிப் பார்க்கத் துவங்கும் போது, அந்த மகத்தான வெளிச்சமானது பரவத் துவங்கி, அந்த மகத்தான ஜனக்கூட்டமானது அதிகமாகி, அதிகமாகி, அதிகமாகிக் கொண்டேயிருக்கும். அதெல்லாம் அப்படியே கிறிஸ்து நெருங்கி வந்து கொண்டிருப்பதை பிரதிபலித்துக் கொண்டிருக்கின்றன. அந்தப் பாடல் கூறுகிறபடி,

"சிறிது கழிந்து, கடைசியாக இயேசுவை நான் காண்பேன்."

*அவர் எனக்காக காத்துக் கொண்டிருப்பார்,*

*இயேசு தம் அழகுமிகு சிங்காசனத்தில்,*

*மிகுந்த இரக்கத்தோடும் உண்மையோடும் வீற்றிருப்பார்,*

*இந்த நாள் வெற்றியோடு முடிந்த பிறகு,*

*அவர் என்னை வீட்டிற்கு வரவேற்றுக் கொள்வார்.*

87. அப்போது நாம் அவரைக் காண்கையில் - நாம் இப்போது இருப்பதைப் போன்று இருக்க மாட்டோம் - அவரை இன்னும் அதிகமாக எப்படி நேசிப்பது என்பதை நாம்-நாம் அறிந்து கொள்வோம். நாம் சிறிது பயத்தோடு பின்னால் நின்று கொண்டிருக்க மாட்டோம், ஏனென்றால் நாம் அவரைப் போலவே இருப்போம். நல்லது, அவர் இப்பொழுது இருப்பதைக் காட்டிலும் நம்மோடு அதிக தொடர்புடையவராக இருப்பார். நாம் அவரை இன்னும் மேலாகப் புரிந்து கொள்வோம், ஏனென்றால் நாம் இந்த சாவுக்குரிய சரீரங்களில் அதிக தூரமாக இருக்கிறோம்; அப்போது நாம் அவருடைய மகிமையின் சரீரத்திற்கு ஒப்பான ஒரு சரீரத்தைக்

கொண்டிருப்போம். நாம் அவரை எவ்விதம் ஆராதிப்பது என்பதை அறிந்து கொள்வோம். அவருடைய ஜீவனின் பிரசன்னமானது எவ்வாறு நம்மைச் சரிப்படுத்தி, வயோதிபத்திலிருந்து நம்மைத் திரும்ப வாலிபத்திற்கு மறுரூபப்படுத்தி, சீர்குலைந்து போன சகலத்தையும் நேராக்கியிருக்கிறது என்பதை நாம் காணும்போது, ஓ, அப்போது அவருடைய வல்லமையானது நம்மை ஏன் சுகப்படுத்தினது என்பதைப் புரிந்து கொள்வோம்.

88. “அவரால் எவ்வாறு அதைச் செய்ய முடியும்? இது என்னவாகும்?” என்னும் கேள்விகள் நம்முடைய சிந்தையில் இருந்து வருகின்றன. எப்படியும், மனித அறிவுக்கு எட்டாத வகையில், அவைகளெல்லாம் மறைந்து போய் விடும். நம்முடைய சிந்தைகளின் பின்னால் கட்டிவைத்திருக்கிற (மர்ம) முடிச்சுகள், “இது இருக்குமா? அது எவ்வாறு முடியும்?” (என்கின்றன). எவ்வாறேனும், அல்லது வேறொரு கம்பீரமான விரல்கள் அப்படியே அந்த குழப்பத்தை நீக்கி, அந்த முடிச்சுகளை அவிழ்க்கும், அதெல்லாமே ஒரு பெரிய அன்பின் கிரீடத்திற்குள் மங்கி மறைந்து விடும்.

89. அப்போது நாம் அவரைக் காண்போம். அப்போது நாம் அவருக்கு ஒப்பானவர்களாய்

இருப்போம். அப்போது நாம் அவரை ஆராதிப்போம். அப்போது தாயானவள் எப்படியிருக்க வேண்டும் என்று தேவன் விரும்புகிறாரோ அப்படியே நாம் அவளைக் காண்போம். அங்கே தாயானவள் தன்னுடைய குடும்பத்தினர் இல்லாமல் முழுமையடைய மாட்டாள்.

90. ஏனென்றால் அவளுடைய முழு ஜீவியத்திலும் மகத்தான நேரம் என்னவென்றால், மேஜையைச் சுற்றிலும் பிள்ளைகள் எல்லாரும் ஆரோக்கியமுள்ளவர்களாகவும் சந்தோஷமுள்ளவர்களாகவும் இருப்பதைக் காண்பதும், அவள் காபியை ஊற்றிக் கொடுப்பதையும், அல்லது அவள் செய்வது எதுவாயிருந்தாலும், இரவு ஆகாரத்தை ஆயத்தம் செய்வதையும், அவளும் தகப்பனாரும் உட்கார்ந்திருப்பதைக் காண்பதும் தான். ஏன், அதுதான் தாயுடைய ஜீவியத்திலேயே சந்தோஷமான நேரமாகும்: அவளுடைய பிள்ளைகள் எல்லாரும் வீட்டில் இருப்பதைக் காண்பது.

91. இப்பொழுது, அந்த நாளைத் தவறவிட்டு விடாதீர்கள் அதைத் தவற விட்டு விட வேண்டாம். உங்களுடைய குடும்பத்தின் மகத்தான சங்கிலியானது இணைப்பு இணைப்பாக ஒன்றோடொன்று பொருந்தியிருக்கட்டும்.

சக்கரத்தின் ஒவ்வொரு குறுக்குக் கம்பியும் (spoke) சக்கரத்தில் இருக்கட்டும். அப்படியானால், நாம் நம்முடைய குடும்பத்தினரோடும் கூட்டத்தினரோடும் அந்த நித்தியத்தின் விதானங்களில் மறுகரையில் இருக்கும் போது, அது என்னவொரு நாளாயிருக்கும்! அப்போது நாம் புரிந்து கொள்வோம்.

92. வெளிப்படுத்தின விசேஷம் 1ம் அதிகாரத்தில் இதை வாக்குத்தத்தம் பண்ணினவர் அவர் தான், அங்கே, "இருபுறமும் கருக்குள்ள பட்டயம் அவர் வாயிலிருந்து புறப்பட்டது (வெளி. 1:16). அவர் தேவனுடைய வார்த்தை என்று அழைக்கப்பட்டார்" என்று அது கூறுகிறது. "மரித்தேன், ஆனாலும், சதாகாலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" என்று கூறின அந்த அதே உதடுகளிலிருந்து தான் இதுவும் வந்திருக்கிறது. அந்த அதே உதடுகளிலிருந்து தான், பரிசுத்த யோவான் 6:30-ல், அது இதைக் கூறுகிறது, "நான் ஒன்றையும் இழந்து போகாமல், நான் மீண்டும் அவைகளை கடைசி நாட்களில் எழுப்புவேன்" என்று கூறுகிறது. அந்த வாக்குத்தத்தத்தைப் பண்ணினவர் அவர் தான்; அந்த அதே விலையேறப்பெற்ற உதடுகள் தான் அதை வாக்குப்பண்ணியிருக்கிறது... நம்மை

இரட்சிக்கிறவரும், நம்மை சுகமாக்குகிறவரும், நம்மை மீட்கிறவரும், கடைசி நாளில் நம்மை உயிர்த்தெழச் செய்கிறவரும் அவர் தான்.

93. அந்நாளில் மறுபடியும் ஒன்றாக இணையும் இம்மகத்தான குடும்பத்திலிருந்து பிரிந்திருக்கிற அந்த சிறு பலவீனமான இணைப்பு நீங்களாக இருந்தால், பரலோகத்தின் தேவன் தாமே, இக்காலையில், எப்படியாவது ஒரு விளங்கிக் கொள்ள இயலாத வழியில் உங்களுடைய சிந்தையில் கட்டப்பட்டிருக்கும் அந்த சிறு (மர்ம) முடிச்சுகளை அவிழ்த்து, அவர் உங்களுக்காக வைத்திருக்கிற அன்பை உங்களுக்கு வெளிப்படுத்துவாராக, நீங்கள் அவருக்கு சேவை செய்யும்படிக்கு இனிமையுடன் வருவீர்களாக.

# ஜூன் 9



*கொலோசெயர் 3:22-24*

**22. வேலைக்காரரே, சரீரத்தின்படி உங்கள் எஜமான்களாயிருக்கிறவர்களுக்கு எல்லாக் காரியத்திலேயும் கீழ்ப்படிந்து, நீங்கள் மனுஷருக்குப் பிரியமாயிருக்க விரும்புகிறவர்களாகப் பார்வைக்கு ஊழியஞ்செய்யாமல், தேவனுக்குப்**

**பயப்படுகிறவர்களாகக் கபடமில்லாத இருதயத்தோடே ஊழியஞ்செய்யுங்கள்.**

**23. நீங்கள் கர்த்தராகிய கிறிஸ்துவைச் சேவிக்கிறதினாலே, சுதந்தரமாகிய பலனைக் கர்த்தராலே பெறுவீர்களென்று அறிந்து,**

**24. எதைச் செய்தாலும், அதை மனுஷர்களுக்கென்று செய்யாமல், கர்த்தருக்கென்றே மனப்பூர்வமாய்ச் செய்யுங்கள்.**

## *செய்தி:* **நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும், ஜூன் 19, 1958**

ஊழியக்கார நண்பர்களே, நான் உங்களுடைய நேரத்தில் மிக அதிகமானவற்றை எடுத்துக் கொள்கிறேன், ஆனால் இங்கிருந்து போவதற்கு முன்பாக நான் இதைக் கூற விரும்புகிறேன், உங்களோடு இதை விட விரும்புகிறேன். உங்கள் சகோதரனாக, உங்களை நேசிக்கிற ஒருவனாக, இப்பொழுது இங்கிருந்து போவதற்கு முன்பாக, இந்தக் கருத்தை சற்று நினைவில் கொள்ளுங்கள்.

கொஞ்ச காலத்திற்கு முன்பு, அங்கே ஒரு மகத்தான மனிதன் இருந்தான், அவன் கைதேர்ந்த நிபுணனாக விளங்கிய ஒரு வாலிபனாக

இருந்தான். ஓ, அவனால் எப்படியாக இசைக்கருவியை வாசிக்க முடிந்தது. அவன் அப்படியே தன்னுடைய இசையைக் கொண்டு, உலகத்தை நிரப்பிக் கொண்டிருந்தான். அவன் அதனுடைய ஒரு மகத்தான கலைஞனாக இருந்தான். எனவே ஒரு இரவில், ஒரு குறிப்பிட்ட தேசத்தில், இங்கிலாந்து தேசத்தில், அநேக ஆயிரக்கணக்கான ஜனங்களை பொழுது போக்குவித்துக் கொண்டிருந்தான். சுற்றிலும் எல்லாவிடங்களிலும், அவர்கள் இந்த மகத்தான கைதேர்ந்த நிபுணனைப் (பார்த்து) மிகவும் திகைத்துப் போனார்கள். அந்த ஜனங்கள்... அவன் தன்னுடைய கச்சேரியை, அல்லது அவனுடைய இசையை இசைத்த பிறகு, அவர்கள் கூச்சலிட்டு, தங்கள் கரங்களைத் தட்டினார்கள், மிகவும் உணர்ச்சிவசப்பட்டு அவ்வாறு செய்து கொண்டிருந்தார்கள். ஆனால் அந்த வாலிபனோ அவர்களுடைய கைதட்டலின் பேரில் எந்த கவனமும் செலுத்தாமல், தொடர்ந்து மேலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர்கள் கவனித்தனர்.

53. அவர்கள் - அவர்கள், அவனுடைய - அவனுடைய இசையை பாராட்டி, அவன் ஒரு மேதை என்று அவன் அறிந்து கொள்ளும்படி செய்ய அவர்களால் எவ்வளவு சத்தமிட முடியுமோ அவ்வளவு உரத்த சத்தமாக,

கூச்சலிட்டுக் கொண்டும், ஓ, அப்படியே தொடர்ந்து செய்து கொண்டும் இருந்தார்கள். ஆனால் அவனோ தொடர்ந்து மேலே நோக்கிப் பார்த்துக் கொண்டிருந்தான். அவன் எதைப் பார்த்துக் கொண்டிருக்கிறான் என்று அவர்களுக்கு வியப்பாயிருந்தது. ஆனால் மேலே பால்கனியின் உச்சியில், வயதான குருவாகிய ஆசிரியர் அங்கே மேலே ஏறிப் போயிருந்தார்; அந்தக் குருவாகிய ஆசிரியர் அதைக் குறித்து என்ன சொல்லப் போகிறாரோ என்றே அவன் வியந்தவனாக அவன் தன்னுடைய கண்ணை வைத்திருந்தான். அவர்கள் என்ன கூறுகிறார்கள் என்று அவன் கவலைப்படவில்லை; அந்த ஆசிரியர் என்ன கூறுவார் என்றும், அந்த வயதான குருவாகிய ஆசிரியர் என்ன கூறுவார் என்பதைக் குறித்தே அவன் அக்கறை கொண்டான்.

சுவிசேஷத்தின் ஊழியக்காரர்களே, நாம் இந்த பெரிய கூட்டங்களையும் (campaigns) ஜனங்களுடைய கைதட்டல்களையும் கவனிக்க வேண்டாம்; உங்களுடைய கண்களை எஜமானர் மேலேயே வைத்திருங்கள். அந்த நாளில் நம்மை உயிர்த்தெழச் செய்யக் கூடிய ஒரே ஒருவர் அவர் தான்.

# ஜூன் 10



*மத்தேயு 7:15-20*

15. கள்ளத்தீர்க்கதரிசிகளுக்கு எச்சரிக்கையா யிருங்கள்; அவர்கள் ஆட்டுத்தோலைப் போர்த் துக்கொண்டு உங்களிடத்தில் வருவார்கள்; உள்ளத்திலோ அவர்கள் பட்சிக்கிற ஓநாய்கள்.

16. அவர்களுடைய கனிகளினாலே அவர் களை அறிவீர்கள்; முட்செடிகளில் திராட்சப் பழங்களையும், முட்பூண்டுகளில் அத்திப்பழங் களையும் பறிக்கிறார்களா?

17. அப்படியே நல்ல மரமெல்லாம் நல்ல கனிகளைக் கொடுக்கும்; கெட்ட மரமோ கெட்ட கனிகளைக் கொடுக்கும்.

18. நல்ல மரம் கெட்ட கனிகளைக் கொடுக்கமாட்டாது; கெட்ட மரம் நல்ல கனி களைக் கொடுக்கமாட்டாது.

19. நல்ல கனி கொடாத மரமெல்லாம் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படும்.

20. ஆதலால், அவர்களுடைய கனிகளி னாலே அவர்களை அறிவீர்கள்.

## *செய்தி:* **நீங்கள் மறுபடியும் பிறந்தாக வேண்டும், டிசம்பர் 31, 1961**

187. நீங்கள் மறுபடியும் பிறக்கும் போது, தேவன் உங்களை நிரூபிக்கிறார்.

அவ்வாறு தான் தேவன் தம்முடைய இயற்கை எல்லாவற்றையும் நிரூபிக்கிறார். எதைக்கொண்டு? அவர்களுடைய கனிகளைக்கொண்டு. அந்தவிதமாகத்தான் அவர் தம்முடைய ஊழியத்தை நிரூபிக்கிறார். அது சரியே.

அவருடைய ஊழியக்காரர்கள் எல்லாரும் அவர் இயற்கையை நிரூபிக்கிற அதேவிதமாகவே நிரூபிக்கப்படுகிறார்கள்.

அது ஒரு பீச் மரம் என்று நீங்கள் எவ்வாறு அறிந்து கொள்கிறீர்கள்? காரணம் என்னவென்றால், அது பீச் பழங்களைக் (peaches) கொடுக்கிறது.

அது ஒரு ஆப்பிள் மரம் என்று உங்களுக்கு எப்படித் தெரியும்? அது ஆப்பிள் பழங்களைக் கொடுக்கிறது.

அது ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? கிறிஸ்தவனுடைய அடையாளங்கள் அதிலிருந்து பிறப்பிக்கப்படுகிறது, கிறிஸ்தவ ஜீவியம் அதிலிருந்து வருகிறது.

அவர் ஒரு போதகர் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? வார்த்தை அவரிடமிருந்து வருகிறது.

அவன் ஒரு தீர்க்கதரிசி என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? வார்த்தை அவன் மூலமாக வந்து, சாட்சி கொடுக்கிறது, மெய்ப்பித்துக் காட்டுவது. அது தன்னைத்தானே நிரூபிக்கிறது. அது எப்படி அவ்விதம் ஆகிறது? அது மரிக்கும் போது, அதுவாக ஆகிறது. அது சரியே. நாம் மரித்து, கிறிஸ்து இயேசுவுக்குள் ஒரு புது சிருஷ்டியாக ஆகும் போது, அது நம்முடைய அழைப்போடு நம்மிடம் வருகிறது, நாம் நம்முடைய அழைப்பில் தரித்திருக்கிறோம்.

நாம் அவருடைய ஊழியக்காரர்களாக இருக்கும்போது, ஆவியின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன. நாம் மறுபடியும் பிறக்கும் போது, கிறிஸ்துவினுடைய ஜீவனின் கனிகள் நம்மைப் பின்தொடருகின்றன. அது சரியே.

அது ஒரு பீச் மரம் என்று உங்களுக்கு எப்படி தெரிகிறது? அதில் பீச் கனிகள் (peaches) உள்ளன.

அவன் ஒரு கிறிஸ்தவன் என்று நீங்கள் எப்படி அறிந்து கொள்கிறீர்கள்? அவன் கிறிஸ்துவைப் போன்று செயல்படுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று நடந்து செல்கிறான்,

அவன் கிறிஸ்துவைப் போன்று பேசுகிறான், அவன் கிறிஸ்துவைப் போன்று பாவத்திற்கு மேலாக வெற்றியோடு ஜீவிக்கிறான்.

அவன் என்ன செய்கிறான், "நான் என்ன செய்திருக்கிறேன் என்று பாருங்கள்" என்று கூறலாம். கிறிஸ்து அவ்விதம் செய்யவில்லை. அவர் எல்லா துதியையும் பிதாவுக்கே கொடுத்தார். அது சரியே. அவ்வாறு தான் நீங்கள் அதை அறிந்து கொள்கிறீர்கள். அவர்களுடைய கனிகளினாலே, நீங்கள் அவர்களை அறிந்து கொள்வீர்கள். என்ன... கட்டாயமாக.

# ஜூன் 11



*மாற்கு 5:1-20*

**1. பின்பு அவர்கள் கடலுக்கு அக்கரையிலுள்ள கதரேனருடைய நாட்டில் வந்தார்கள்.**

**2. அவர் படவிலிருந்து இறங்கினவுடனே, அசுத்த ஆவியுள்ள ஒரு மனுஷன் பிரேதக்கல்லறைகளிலிருந்து அவருக்கு எதிராக வந்தான்.**

3. அவனுடைய குடியிருப்பு கல்லறைகளிலே இருந்தது; அவனைச் சங்கி#களினாலும் கட்ட ஒருவனாலும் கூடாதிருந்தது.

4. அவன் அநேகந்தரம் விலங்குகளினாலும் சங்கிலிகளினாலும் கட்டப்பட்டிருந்தும், சங்கிலிகளை முறித்து, விலங்குகளைத் தகர்த்துப்போடுவான்; அவனையடக்க ஒருவனாலும் கூடாதிருந்தது.

5. அவன் எப்பொழுதும் இரவும் பகலும், மலைகளிலும் கல்லறைகளிலும் இருந்து, கூக்குரலிட்டு, கல்லுகளினாலே தன்னைக் காயப்படுத்திக்கொண்டிருந்தான்.

6. அவன் இயேசுவைத் தூரத்திலே கண்டபோது, ஓடிவந்து, அவரைப்பணிந்துகொண்டு:

7. இயேசுவே, உன்னதமான தேவனுடைய குமாரனே, எனக்கும் உமக்கும் என்ன? என்னை வேதனைப்படுத்தாதபடிக்குத் தேவன்பேரில் உமக்கு ஆணையென்று மிகுந்த சத்தமிட்டுச் சொன்னான்.

8. ஏனெனில் அவர் அவனை நோக்கி: அசுத்த ஆவியே, இந்த மனுஷனை விட்டுப் புறப்பட்டுப் போ என்று சொல்லியிருந்தார்.

9. அப்பொழுது அவர் அவனை நோக்கி: உன் பேர் என்னவென்று கேட்டார். அதற்கு அவன்: நாங்கள் அநேகராயிருக்கிறபடியால் என் பேர் லேகியோன் என்று சொல்லி,

10. தங்களை அந்தத் திசையிலிருந்து துரத்திவிடாதபடிக்கு அவரை மிகவும் வேண்டிக்கொண்டான்.

11. அப்பொழுது, அவ்விடத்தில் மலையருகே அநேகம் பன்றிகள் கூட்டமாக மேய்ந்துகொண்டிருந்தது.

12. அந்தப் பிசாசுகளெல்லாம் அவரை நோக்கி: பன்றிகளுக்குள்ளே போகும்படி, அவைகளுக்குள்ளே எங்களை அனுப்பும் என்று அவரை வேண்டிக்கொண்டன.

13. இயேசு அவைகளுக்கு உத்தரவு கொடுத்தவுடனே, அசுத்த ஆவிகள் புறப்பட்டுப் பன்றிகளுக்குள் போயின; உடனே ஏறக்குறைய இரண்டாயிரம் பன்றிகளுள்ள அந்தக்கூட்டம் உயர்ந்த மேட்டிலிருந்து ஓடி, கடலிலே பாய்ந்து, கடலில் அமிழ்ந்து மாண்டது.

14. பன்றிகளை மேய்த்தவர்கள் ஓடி, இதைப் பட்டணத்திலும் சுற்றுப்புறங்களிலும் அறிவித்தார்கள். அப்பொழுது சம்பவித்ததைப் பார்க்கும்படி ஜனங்கள் புறப்பட்டு;

15. இயேசுவினிடத்தில் வந்து, லேகியோனாகிய பிசாசுகள் பிடித்தவன் வஸ்திரந்தரித்து, உட்கார்ந்து, புத்தி தெளிந்திருக்கிறதைக் கண்டு, பயந்தார்கள்.

16. பிசாசுகள் பிடித்திருந்தவனுக்கும் பன்றிகளுக்குச் சம்பவித்ததைக் கண்டவர்களும் அவர்களுக்கு விவரமாய்ச் சொன்னார்கள்.

17. அப்பொழுது தங்கள் எல்லைகளை விட்டுப்போகும்படி அவரை வேண்டிக்கொள்ளத் தொடங்கினார்கள்.

18. அப்படியே அவர் படவில் ஏறுகிறபொழுது, பிசாசு பிடித்திருந்தவன், அவரோடேகூட இருக்கும்படி தனக்கு உத்தரவுகொடுக்க அவரை வேண்டிக்கொண்டான்.

19. இயேசு அவனுக்கு உத்தரவுகொடாமல்: நீ உன் இனத்தாரிடத்தில் உன் வீட்டிற்குப்போய், கர்த்தர் உனக்கு இரங்கி, உனக்குச்

**செய்தவைகளையெல்லாம் அவர்களுக்கு அறிவியென்று சொன்னார்.**

**20. அந்தப்படி அவன் போய், இயேசு தனக்குச் செய்தவைகளையெல்லாம் தெக்கப்போலி என்னும் நாட்டில் பிரசித்தம்பண்ணத்தொடங்கினான்; எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள்.**

### *செய்தி:* **கேதரா தேசத்து வெறிபிடித்த மனிதன், ஜுலை 20, 1954**

லேகியோனுக்குப் புத்தி தெளிந்த பிறகு என்னால் அவனைக் காண முடிகிறது. அவன் சுகமடைந்து விட்டான். அவன் இயேசுவை நோக்கி தன்னுடைய கைகளை அசைத்துக் கொண்டேயிருந்த பிறகு, என்னால் அவனைக் காண முடிகிறது, பிசாசுகளாகிய அந்த ஜனங்கள் இறங்கி வந்து, “நீ இங்கே சுற்றிலும் இருப்பது எங்களுக்கு விருப்பமில்லை; எங்களுக்குப் பன்றிகள் தான் வேண்டும். எங்களுடைய பன்றிகளைத் தான் நாங்கள் அதிகம் விரும்புகிறோம். அதைப் போன்ற அப்படிப்பட்ட ஒரு எழுப்புதலும், இங்கேயுள்ள இந்த எல்லா முட்டாள்தனங்களும், தெய்வீக சுகமளித்தலும் எங்களுக்கு வேண்டாம். அற்புதங்களின் நாட்கள் கடந்து விட்டன என்பது எங்களுக்குத் தெரியும்.

அந்த மனிதன் உணர்ச்சியைக் கிளறி விடுபவன் மட்டுமே. இப்பொழுது, எங்கள் நாட்டை விட்டு வெளியே போ. அந்தப் பரிசுத்த உருளையனுடைய காரியத்தை இங்கே ஆரம்பிக்க எங்களுக்கு விருப்பமில்லை" என்றனர்.

100. இயேசு அங்கு தங்கியிருக்க மாட்டார்; கவலைப்பட வேண்டாம். அவர் வரவேற்கப்படாத இடத்தில் அவர் தங்கவே மாட்டார். அவர் அப்படியே தம்முடைய தலையைத் திருப்பி கீழேயிருந்த படகை (ship) நோக்கி நடந்து சென்றார், அவர்களிடம் ஒரு வார்த்தையும் கூறவேயில்லை... (சுகத்தைப்) பெற்றிருந்த, பழைய லேகியோன், "ஓ, அல்லேலூயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம். ஓ இயேசுவே, நானும் உம்மோடு கூட வரட்டும். ஓ, நானும் உம்மோடு வர விரும்புகிறேன். இந்த ஒரு கூட்டம் முட்டாள்கள் என்ன கூறினாலும் எனக்குக் கவலையில்லை, அதைக் குறித்து எனக்கு அக்கறையில்லை. கட்டியிருந்த கால்விலங்குகள் ஒவ்வொன்றையும் பின்னே விட்டு விட்டேன்; நான் உம்மைப் பின்பற்றி வரட்டும். நான் ஏதோவொரு காரியத்தைக் கண்டுகொண்டேன். நான் உம்மோடு வரட்டும்" என்றான்.

இயேசு அவனைத் திரும்பிப் பார்த்து, "இப்பொழுது, நீ போய் உனக்கு என்ன

சம்பவித்தது என்பதை உன்னுடைய பெற்றோர்களிடம் சொல்லு" என்றார். என்னே. "போய், சாட்சி கூறு."

அவன் திரும்பிப் போன போது, அவன் அந்தப் பன்றி வளர்ப்பவர்களிடம் என்ன கூறியிருப்பான் என்று நான் சற்றே வியப்படைகிறேன். அந்தச் சிறிய பழைய படகு அவனுடைய பார்வையை விட்டு மறைவது வரைக்கும், அவனால் அதைக் காணக்கூடிய தூரம் வரையில் அவன் அப்படியே கையசைத்துக் கொண்டே, "நான் ஏதோவொரு நாளில், அவரை மீண்டும் காண்பேன்" என்றான்.

101. பிறகு அவன் தெருவில் போவதை என்னால் காண முடிகிறது. அவர்களில் சிலர், "நல்லது, அங்கே போய்க் கொண்டிருக்கிற அந்த ஆள் யார்?" என்று கேட்கிறார்கள்.

அவன், "மகிமை, அல்லேலூயா" என்கிறான்.

அவர்கள், "அந்த ஆள் இன்னும் பைத்தியம் பிடித்த நிலையில் தான் இருக்கிறான். அதோ அவன் போகிறான்" என்றார்கள்.

அவன் தெருவில் சென்று, "ஓ, அல்லேலூயா, கர்த்தருக்கு ஸ்தோத்திரம்" என்று கூறுகிறான்.

நல்லது, அவர்கள், "அதைப் பற்றி ஒரு காரியம் இருக்கிறது: அவன் கொஞ்சம்

வஸ்திரங்களை உடுத்தியிருக்கிறானே. நிச்சயமாக அவனுக்கு ஏதோ சம்பவித்திருக்கிறது" என்றார்கள்.

102. அவன் அங்கு போவதை என்னால் காண முடிகிறது, இதோ அந்த சம்பவம். அவன் சுற்றும் முற்றும் நோக்கிப் பார்ப்பதை என்னால் காண முடிகிறது. "நல்லது, அந்நாட்டு தலைவன் அவனுடைய மனைவியை வெளியே அனுப்பி வைத்திருந்தான். அங்கே எந்த...வும் இல்லை. அவனுடைய பரிதாபமான இளம் மனைவி, அவன் சுகமடைய வேண்டுமென்று ஒருக்கால் எல்லா நேரமும் ஜெபித்திருப்பாள். அவன் திரும்பி வருகிற போது, அவனுடைய சிறு பிள்ளைகள், அவன் வருவதைப் பார்க்கும் போது, அவர்கள் ஓடிச்சென்று மறைந்து கொள்வார்கள், மற்றும் எல்லாவற்றையும் செய்வார்கள். அவனுடைய பரிதாபமான இளம் மனைவியும் அந்த பாதையை விட்டு வெளியே போக வேண்டியிருந்தது, ஏனென்றால் அவன் மோசமானவனாக இருந்தான். அவன் உள்ளே வந்து, அந்த இடத்தையே சுக்குநூறாக உடைத்தெறிந்து விடுவான்.

ஒரு குடிகாரனோ அல்லது பிசாசு பிடித்தவனோ அவ்விதமாகத்தான் செய்கிறான்: அவன் இந்த கோப வலிப்புகளில் ஒன்றால் ஆட்கொள்ளப்பட்டு, வீட்டைச் சுற்றியுள்ள

எல்லாவற்றையும் உதைத்து எறிந்து விடுவான். நீங்கள் உங்களைக் குறித்தே வெட்கப்பட்டாக வேண்டும், சபையைச் சேர்ந்தவர்களும் கூட, ஒருக்கால் டீக்கன் வாரியத்தில் உள்ளவர்களும் கூட அவ்வாறு செய்கின்றனர். சகோதரனே, இன்று பிற்பகலில் அவர்களில் சிலரைக் கொண்ட சற்று பெரிய கூட்டம் ஒன்றைக் கொண்டிருக்க விரும்பினேன். அது சரிதான். ஆமாம், டீக்கன் வாரியத்தை சேர்ந்தவர்களாக இருந்தாலும் அவர்கள் அவ்விதமாக நடந்து கொள்ளுகிறார்கள்.

இதோ அவன்... உள்ளே வருகிறான். அவன் மெல்ல நழுவியபடி வந்த போதிலும், அந்த வீடு பூட்டிக் கிடந்தது. மனைவி எங்கே? அவன் வெளியில் சென்று, தெருவிலிருந்த யாரோ ஒருவரிடம் கேட்டான், "அவள் அங்கே அந்த சந்திற்கு இடம்பெயர்ந்து போயிருக்க வேண்டும்" என்ற பதில் கிடைத்தது.

103. அங்கே ஒரு கூட்டம் பழைய தகர டப்பாக்களும் (tin cans) மற்றும் காரியங்களும் குவித்து வைக்கப்பட்டிருந்த இடத்திற்கு அவன் போய், சுற்றும் முற்றும் பார்ப்பதை என்னால் காண முடிகிறது, அங்கே கொஞ்சம் புதர்செடிகள் ஒன்றாக வைத்து வேயப்பட்டு அரைகுறையாகக் கட்டப்பட்டிருந்த ஒரு சிறு பழைய குடிசை இருந்தது, மேலும் அதோ அவள் பின்முற்றத்தில்

இருந்து, ஒரு துணிச்சலவைக் கல்லின் மேல் துணிகளைத் தேய்த்துக் கொண்டிருந்தாள், ஒருக்கால் அண்டை வீட்டார்களின் துணிகளைத் துவைத்துக் கொண்டிருந்திருப்பாள். அப்போது, அந்தச் சிறு பிள்ளைகள், "அம்மா, அம்மா, அதோ அவர் வருகிறார், அதோ அவர் வருகிறார்," என்று உரக்கக் கத்திக் கொண்டே, அவ்விதமாக அவர்களால் கூடியமட்டும் வேகமாக ஓடத் தொடங்கினார்கள்.

அவன், "இனிய இருதயமே, ஒரு நிமிடம் பொறு" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது.

அவனுடைய மனைவியோ, "ஓ, ஓ, ஓ" என்று கூறுகிறாள்.

அவனோ, "இனிய இருதயமே, கொஞ்சம் பொறு, ஓடாதே. ஏதோவொன்று எனக்கு சம்பவித்து விட்டது" என்கிறான். ஆமென்.

104. அவன் உள்ளே நடந்து சென்று, அவனுடைய இளம் மனைவி உடுத்தியிருந்த உடையின் கந்தலான கைப்பாகத்தைப் பார்ப்பதை என்னால் காண முடிகிறது. அவனுடைய பரிதாபமான சிறு பிள்ளைகள் நடுநடுங்கியவாறு அங்கே நின்று கொண்டிருக்க, அவன் தன்னுடைய கரத்தை அவர்களைச் சுற்றிலும் போடுவதைக்

காண்கிறேன். ஒரு சிறு பையன் அடுத்த சிறு - சிறு பெண் பிள்ளையிடம், "அப்பாவுக்கு என்ன ஆயிற்று" என்று கூறுவதை என்னால் கேட்க முடிகிறது. தொடர்ந்து, "அம்மா, அம்மா, அப்பாவுக்கு என்ன-என்ன ஆயிற்று" என்று கேட்கிறார்கள்.

அவனுடைய கன்னங்களில் கண்ணீர் வழிந்தோடுவதை என்னால் காண முடிகிறது. அவன் தன்னுடைய கரங்களை (பிள்ளைகளின்) தாயைச் சுற்றிலும், அந்தச் சிறு பிள்ளைகளைச் சுற்றிலும் போட்டுக் கொண்டு, அவர்களைத் தூக்கி வைத்து, "இப்பொழுது, ஒரு நிமிடம் பொறுங்கள். அப்பாவுக்கு என்ன ஆயிற்று என்று உங்களிடம் கூறப் போகிறேன். அப்பா இயேசுவைச் சந்தித்தேன். அது தான் விஷயம். அப்பா இயேசுவைக் கண்டுகொண்டேன்" என்று கூறுகிறான்.

அந்நாளில் அது லேகியோனுக்கு சம்பவித்தது போலவே, இன்றைக்கும் அப்பா அம்மா இருவருக்கும் அது சம்பவிக்கும். நீங்கள் இயேசுவைக் கண்டுகொள்ளும் போது, நீங்கள் ஒருபோதும் அதேவிதமாக இருக்க மாட்டீர்கள். லேகியோனால் ஒருபோதும் அதேவிதமாக இருக்க முடியவில்லை. இயேசுவை ஒருவிசை கண்டுகொண்ட எந்த மனிதனாலும் அதன்பிறகு

ஒருபோதும் அதேவிதமாக இருக்க முடியாது. நாம் ஜெபிப்போம்.

# ஜூன் 12

*தலைப்பு:* **உன்னத அழைப்பு**

மற்றவர்கள் பெரியவர்களாக ஆக தேவன் அனுமதிப்பார், ஆனால் உங்களையோ தாழ்ந்தவர்களாகவே வைத்திருப்பார்.

மற்றவர்கள் அவருக்கு ஒரு பணி செய்து, அதற்கான நன்மதிப்பைப் பெற அனுமதிப்பார். ஆனால் நீங்களோ அவருக்காக உழைத்து பாடுபடும்படி செய்து, நீங்கள் எவ்வளவு அவருக்காக செய்திருக்கிறீர்கள் என்பதையும் கூட அறியாமலிருக்கும்படி செய்து விடுவார்.

உங்கள் உழைப்பை இன்னும் அதிக விலையுயர்ந்ததாகச் செய்ய, நீங்கள் செய்த வேலைக்கு மற்றவர்கள் நன்மதிப்பை பெறும்படி செய்வார். இயேசு வரும்போது, அது உங்களுக்கு கிடைக்கவிருக்கும் பலனை பத்து மடங்கு அதிகரிக்கும்.

# ஜுன் 13



*சங்கீதம் 46:1*

**தேவன் நமக்கு அடைக்கலமும் பெலனும், ஆபத்துக்காலத்தில் அநுகூலமுமான துணையுமானவர்.**



*செய்தி:* **தீர்க்கதரிசியாகிய எலிசா, ஜுலை 23, 1954**

எனவே இச்சமயத்தில் அங்கே - யூதாவிலோ யோசபாத் இராஜாவாக இருந்தான். யோசபாத் ஒரு நீதிமானாகவும் தேவனுக்கு பயப்படுகிற ஒரு மனிதனாகவும் இருந்தான்.

7. இப்பொழுது, இந்த யோராம், மோவாபின் இராஜா தன்னுடன் யுத்தத்தை அறிவிக்கப் போகிறான் என்பதை கண்டு கொண்ட பிறகு, ஏன், அவன் யூதாவுக்குச் சென்று, இந்த மோவாபின் இராஜாவுடன் யுத்தம் பண்ணும்படி செல்ல யோசபாத்தின் எத்தனங்களும் அவனுடன் சேருமா என்று யோசபாத்திடம் கேட்டான்.

இப்பொழுது, நான் இங்கே சற்று நேரம் அழுத்தமாக கூற விரும்பும் ஒரு கருத்து என்னவென்றால், விசுவாசிகள் தங்களை அவிசுவாசிகளுடன் பிணைத்து விடுவதைப்

பற்றியது தான். அது (கிரியை) செய்வதில்லை... ஏன், அது கிரியை செய்வதேயில்லை. தேவன் அதில் பிரியமாயிருப்பதில்லை. தேவன், "அவிசுவாசிகளிடமிருந்து வெளியே வாருங்கள்" என்றே சொல்லியிருக்கிறார். பாருங்கள்? இரவையும் பகலையும் ஒன்றாக சேர்க்க உங்களால் இயலாது. விசுவாசத்தையும் அவிசுவாசத்தையும் ஒன்றாக சேர்க்கவும் உங்களால் முடியாது. மேலும்-மேலும் நீங்கள் அவிசுவாசத்தைக் காணும்போது, அது வெறுப்போடு இணைந்தே செல்கிறது. நீங்கள் விசுவாசத்தைக் கண்டு கொள்ளும் போது, அது அன்போடு இணைந்து செல்கிறது. அன்பு விசுவாசத்தை உருவாக்குகிறது. ஏன், விசுவாசமின்றி, உங்களால் அன்பைக் கொண்டிருக்க முடியாது.

8. இப்பொழுது அதன்பிறகு, இந்த விசுவாசியான யோசபாத் ஒரு பெரிய இராஜ்யத்தைக் கொண்டிருந்த யாரோ ஒருவனுக்கு மரியாதை செலுத்த விரும்புகிறான், அநேகமாக அவனுடைய நாளில் இருந்த இந்த வாலிப இராஜாவைக் குறித்த கௌரவத்தினால், அவன் அதைச் செய்ய வேண்டுமா அல்லது வேண்டாமா என்று தேவனிடம் ஆலோசனை கேட்பதற்கோ அல்லது தேவனிடம் கேட்கும் முன்பாக, அவன் சத்துருவுடன் யுத்தம் பண்ணும்படி செல்ல தன்னுடைய இராணுவத்தைக் கூட்டினான், அவன்

மோவாபியரை விடவும் மோசேமான அல்லது சீர்கெட்ட அதேபோன்ற ஒரு சத்துருவுடன் அவன் தன்னைப் பிணைத்துக் கொண்டிருந்தான் என்பதை உணரவில்லை.

சென்ற உலகப் போரின் போதும் நாம் அதே காரியத்தையே செய்தோம் என்று நான் எண்ணுகிறேன். இதன் பேரில் பேசுவதற்கு இன்றிரவு நமக்கு நேரம் இருக்க விருப்பமுண்டு, ஆனால் நமக்கு நேரமில்லை. அதாவது, நாம் நம்மை ரஷ்யாவுடன் பிணைத்துக் கொண்டு ரஷ்யாவுடன் ஒரு ஒப்பந்தம் செய்த போது... "இருவர் மனம் ஒருமித்திருந்தாலொழிய எவ்வாறு ஒருமித்து நடந்து செல்ல முடியும்?" பாருங்கள்? அவர்கள் - நாம் சிலுவையைப் புறக்கணித்து விட்டோம், அதற்காக நாம் இரண்டு மடங்கு சிலுவையைப் பெற்றுக் கொண்டோம். இப்பொழுது, நாம் அவர்களிடம் அனுப்பின அதே சாதனத்தை திருப்பி நம்மிடமே அவர்கள் வீசி எறியப் போகிறார்கள் என்பது போன்று தோன்றுகிறது.

நல்லது, உலகம் போகிற வழி அதுதான், ஆனால் ஒருநாள், அங்கே நீதியின் இராஜா வருவார், அதற்கு மேலும் யுத்தம் இருக்காது. அதற்கு மேல் துக்கம் இருக்காது, எல்லாம் முடிந்து விடும். தானியேல் கண்ட மலைகளிலிருந்து பெயர்ந்து விழும் கல் வரும் மட்டுமாக,

உலகத்தின் இராஜ்யங்கள் சாத்தானின் கட்டுப்பாட்டிற்குள் இன்னும் இருக்கிறது. அவைகள் தன்னுடைய இராஜ்யங்கள் என்று சாத்தான் கூறினான்; இயேசுவும் அதை ஒப்புக் கொண்டார். அவர் அவனை வணங்கினால், அவைகளை இயேசுவுக்குக் கொடுப்பதாக அவன் வாக்களித்தான். இயேசு எப்படியும் அவைகளுக்கு சுதந்தரவாளியாய் இருப்பார் என்பதை அறிந்தவராய், "எனக்குப் பின்னாகப் போ, சாத்தானே. 'உன் தேவனாகிய கர்த்தரைப் பணிந்து கொண்டு, அவர் ஒருவருக்கே ஆராதனை செய்வாயாக' என்று எழுதியிருக்கிறதே" என்றார்.

9. இப்பொழுது, இந்நேரத்தில், இந்த அருமையான மனிதன், அவன் நோக்கிப் பார்த்த போது, ஒரு பிரகாசமான பக்கம் அங்கே இருப்பதைக் கண்டதினிமித்தமாக, தேவனிடம் ஆலோசிப்பதற்கு முன்பாக, அவன் இந்த அவிசுவாசியோடு தன்னை சேர்த்துக் கொண்டான். நான் இன்றிரவு இதைக் குறித்து தொடர்ந்து அதிக நேரம் பேச நேரமிருக்கிறது... அநேக நல்ல கிறிஸ்தவ இருதயங்கள், நீங்கள் வழக்கமாகப் போகிற சிறியதும் பழையதுமான நாட்டுப்புற சபையை மிஞ்சி விடும் ஒரு புதிய சபையை அவர்கள் சமுதாயத்தில் கட்டின போது, அவர்களும் அதே காரியத்தையே செய்து

விட்டார்கள். அநேகமாக, நீங்கள் சற்று மேலான வகுப்பு ஜனங்களாக உங்களை எண்ணிக் கொண்டு, அங்கே சென்றீர்கள், ஒருகாலத்தில் நீங்கள் சேர்ந்திருந்த பழமை நாகரீகமான சபையை விட்டு விலகி, நீங்கள் அங்கு சென்று, உங்களை நீங்களே அதனுடன் இணைத்துக் கொண்டீர்கள். அப்போது இந்த யோசபாத்துக்கு நேரிட்ட அதே தொல்லைக்குள் நீங்களும் போய் விடுகிறீர்கள்.

எப்படியும், அவர்கள் தங்கள் இராணுவங்களை ஒன்றாகக் கூட்டினார்கள். ஒரு விசுவாசி தன்னுடைய சிருஷ்டிகரோடுள்ள தொடர்பை விட்டு விட்டு வெளியே வருவதைக் கவனியுங்கள். அவர்கள் தங்கள் திசைகாட்டும் கருவியை ஏழு நாட்களாக தயார் செய்து, ஏதோமின் இராஜாவையும் தங்களுடன் சேர்த்துக் கொண்டு, இந்தப் பெரிய மோவாபியரின் கூட்டத்தை எதிர்கொள்ளும்படி அங்கே வெளியே வனாந்தரத்தில் சென்றனர்.

10. இப்பொழுது, அவர்கள் தேவனிடம் கூட ஆலோசனைக் கேட்காமல் இத்தனை வேகமாக தூரமாக சென்று விட்டனர். ஏழு நாட்கள் ஆனபோது, நல்லது, தங்கள் கைவசம் தண்ணீர் இல்லை என்று கண்டார்கள். அவர்கள் குடிப்பதற்கு தண்ணீர் எதுவும் இல்லாதிருந்தது. அவர்கள் தங்கள் கால்நடைகளுடனும், தங்கள் மிருக ஜீவன்களுடனும் அங்கே வெளியில் இருந்தார்கள்,

அவர்களுக்கு தண்ணீர் இல்லாமலிருந்தது. அது ஏறக்குறைய அப்படியே அவர்களின் முடிவாக இருந்தது போன்று காணப்பட்டது.

இப்பொழுது, அதையே தான் நாமும் செய்கிறோம். சில சமயங்களில் நாம் திடீர் கோப வெறி கொண்டு, தேவனைக் குறித்து சிந்திக்காமல், அதற்காக ஜெபிக்காமல், அதைச் செய்யலாமா செய்யக் கூடாதா என்று கர்த்தரிடம் கேட்காமல் ஏதோவொரு இடத்திற்குப் புறப்பட்டு சென்று விடுகிறோம், அப்பொழுது நம்முடைய ஆசீர்வாதங்கள் தடைபடுவதை நாம் காண்கிறோம். பிறகு சில சமயங்களில் நாம், "நல்லது, நான் ஏன் அதிகமான ஆசீர்வாதங்களைக் கொண்டிருக்க முடியவில்லை என்று வியப்பாயுள்ளதே" என்று வியப்படைகிறோம். நீங்கள் கவனிக்காமல் இருந்து, உங்களுடைய ஜெப ஜீவியத்தை விட்டு விடுகிறீர்கள். நீங்கள், "நல்லது, நான் ஒரு கிறிஸ்தவன்" என்று கூறலாம். நல்லது, நீங்கள் ஜெபிக்க வேண்டும் என்பதற்கு எப்பொழுதும் இருந்ததைக் காட்டிலும் அது இன்னும் கூடுதல் அடையாளமாய் உள்ளதே.

**தினமும் வேதம் வாசியுங்கள். தினமும் ஜெபியுங்கள்.**

**தேவனிடம் முதலில் அதைக் குறித்து ஆலோசிக்காமல், அதிக வெறுப்பூட்டும்**

நேரத்திலோ அல்லது மிகத் துரிதமாகவோ எந்தத் தீர்மானமும் செய்யாதீர்கள்.

“பிதாவே, நான் இதைச் செய்யலாமா?” என்று அவரிடம் கேளுங்கள்.

“நான் இதைச் செய்வது உமக்குச் சித்தமா?” என்று அவரிடம் கேளுங்கள்.

அப்போது பரிசுத்த ஆவியானவர் உங்களிடம் என்ன பேசுகிறார் என்று பாருங்கள்.

அவர் ஒரு தரிசனத்தை உங்களுக்குத் தராமல் இருக்கலாம், ஆனால் நீங்கள் அவரிடம் உத்தமமாயிருந்து கேட்டால், நீங்கள் அறிந்து கொள்ளும் வண்ணம் ஏதாவதொரு வழியில் அவர் உங்களோடு பேசுவார்.

## ஜூன் 14



*மத்தேயு 25:1-13*

1. *அப்பொழுது, பரலோகராஜ்யம் தங்கள் தீவட்டிகளைப் பிடித்துக்கொண்டு மணவாளனுக்கு எதிர்கொண்டுபோகப் புறப்பட்ட பத்துக் கன்னிகைகளுக்கு ஒப்பாயிருக்கும்.*

2. அவர்களில் ஐந்துபேர் புத்தியுள்ளவர்களும், ஐந்துபேர் புத்தியில்லாதவர்களுமாயிருந்தார்கள்.

3. புத்தியில்லாதவர்கள் தங்கள் தீவட்டிகளை எடுத்துக்கொண்டுபோனார்கள், எண்ணெயையோ கூடக்கொண்டுபோகவில்லை.

4. புத்தியுள்ளவர்கள் தங்கள் தீவட்டிகளோடுங்கூடத் தங்கள் பாத்திரங்களில் எண்ணெயையும் கொண்டுபோனார்கள்.

5. மணவாளன் வரத் தாமதித்தபோது அவர்கள் எல்லாரும் நித்திரைமயக்கமடைந்து தூங்கிவிட்டார்கள்.

6. நடுராத்திரியிலே: இதோ மணவாளன் வருகிறார், அவருக்கு எதிர்கொண்டுபோகப்புறப்படுங்கள் என்கிற சத்தம் உண்டாயிற்று.

7. அப்பொழுது அந்தக் கன்னிகைகள் எல்லாரும் எழுந்திருந்து, தங்கள் தீவட்டிகளை ஆயத்தப்படுத்தினார்கள்.

8. புத்தியில்லாதவர்கள் புத்தியுள்ளவர்களை நோக்கி: உங்கள் எண்ணெயில் எங்களுக்குக்

கொஞ்சங்கொடுங்கள், எங்கள் தீவட்டிகள் அணைந்துபோகிறதே என்றார்கள்.

9. புத்தியுள்ளவர்கள் பிரதியுத்தரமாக: அப்படியல்ல, எங்களுக்கும் உங்களுக்கும் போதாமலிராதபடி, நீங்கள் விற்கிறவர்களிடத்திற் போய், உங்களுக்காக வாங்கிக்கொள்ளுங்கள் என்றார்கள்.

10. அப்படியே அவர்கள் வாங்கப் போனபோது மணவாளன் வந்துவிட்டார்; ஆயத்தமாயிருந்தவர்கள் அவரோடே கூடக் கலியாண வீட்டிற்குள் பிரவேசித்தார்கள்; கதவும் அடைக்கப்பட்டது.

11. பின்பு, மற்றக் கன்னிகைகளும் வந்து: ஆண்டவரே, ஆண்டவரே எங்களுக்குத் திறக்கவேண்டும் என்றார்கள்.

12. அதற்கு அவர்: உங்களை அறியேன் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் என்றார்.

13. மனுஷகுமாரன் வரும் நாளையாவது நாழிகையையாவது நீங்கள் அறியாதிருக்கிறபடியால் விழித்திருங்கள்.

55. மேலும் ஞாபகம் கொள்ளுங்கள், உறங்கிக் கொண்டிருக்கும் கன்னிகை எண்ணெய் வாங்கப் போன அதே நேரமே மணவாளன் வருகிற நேரமாக இருக்கிறது. மகிமை. நீங்கள் அதைக் காணவில்லையா? பிரஸ்பிடேரியன்களும், எபிஸ்கோபாலியன்களும், மற்றவர்களும் வந்து பரிசுத்த ஆவியைத் தேடிக்கொண்டிருக்கின்றனர், உங்களுடைய தீவட்டியின் திரி வெட்டப்பட்டிருப்பது நல்லது. திரி வெட்டப்படுதல், திரி வெட்டப்படுதல், ஆம், திரி வெட்டப்படுவது அதற்குத் தேவையாயுள்ளது. பெந்தெகோஸ்தே சில தீவட்டிகளிலுள்ள திரியை வெட்டுவது நல்லது. ஆமென். இந்த உலகத்தின் அநேக (காரியங்களை) உங்களை விட்டு வெட்டி அப்புறப்படுத்தி விடுங்கள். நீங்கள் சிறிது சிறிதாக அரித்துத் தின்னப்பட்டீர்கள். விளக்கின் திரிகள் மோசமான உருவத்தில் உள்ளன. விளக்கினுடைய திரி என்பது ஒரு மகத்தான காரியம் என்பது உங்களுக்குத் தெரியும். நான் வழக்கமாகக் கவனிப்பேன். தேவனுடைய ஒரு உண்மையான விளக்குத் திரி என்பது ஒரு - ஒரு விசுவாசியாக இருக்கிறான், அவன் தான் ஒரு விளக்குத் திரியாக

இருக்கிறான். கவனியுங்கள், இங்கே மேலே அதன் ஒரு முனையில் சுடரும், மறு முனையானது எண்ணெயில் மூழ்கியும் இருக்கிறது, அது எண்ணெயை இழுத்து, சுடரை உண்டாக்கிக் கொண்டிருக்கிறது. என்னவொரு - என்னவொரு சபை, என்னவொரு வல்லமை. இருப்பதற்கு என்னவொரு இடம். அல்லேலூயா.

கிழக்கில் பிரகாசிக்கிற அந்த அதே சுவிசேஷ ஒளியே மேற்கிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. அது சாயங்கால நேரத்தின் வெளிச்சமாக இருக்க வேண்டும். பெந்தெகோஸ்தேயினரே, எழும்பி, உங்களுடைய தீவட்டியினுடைய திரியை வெட்டி விடுங்கள். உலகத்தை வெட்டி அப்புறப்படுத்துங்கள். உலகத்தின் ஃபேஷன்களை வெட்டி அப்புறப்படுத்துங்கள்; உலக காரியங்களை வெட்டி அப்புறப்படுத்துங்கள். ஆயத்தமாகுங்கள்; வேளை சமீபமாயுள்ளது.

56. சரியாக அவர்கள் இதைப் பெற்றுக்கொள்ளப் போகும் போது, என்ன சம்பவித்தது? என்ன நடந்தது? அப்போது மணவாளன் உள்ளே போனார். பாருங்கள், அமெரிக்கா பரிசுத்த ஆவியைத் தூஷித்திருக்கிறது. அவள் நாற்பது அல்லது ஐம்பது வருடங்களுக்கு முன்பு காட்சியில் வந்து

இருந்தது முதற்கொண்டு, அவள் எப்பொழுதும் அதைக் குறித்துப் பரிகாசம் செய்தாள். அவள் தொடர்ந்து பரிகாசம் செய்தாள். மற்ற சபைகளும் பரிகாசம் செய்திருக்கின்றன. அவர்கள் தங்களையே காண்பித்திருக்கின்றனர். இப்பொழுது, அவர்கள் தங்களுடைய தலையை வெளியே நீட்டிக்கொண்டு, "நாங்கள் இதில் கொஞ்சத்தைக் கொண்டிருக்க விரும்புகிறோம்" என்று கூறத் தொடங்குகின்றனர். ஆனால் அவர்கள் இதைச் செய்வதற்குப் போகும்போது, அது ஒரு அடையாளமாக இருக்கிறது, நாம் நம்முடைய விளக்கினுடைய திரியை வெட்டிச் சுத்தப்படுத்தும்படிக்குப் போக வேண்டும். விளக்குகளிலுள்ள திரிகளை வெட்டிச் சுத்தப்படுத்தும் படியாக போகும் சில பிரசங்கிமார்களை தேவன் எழுப்புகிறார். நம்முடைய தீவட்டியினுடைய திரியை வெட்டி சுத்தப்படுத்தி, உண்மையான பெந்கொஸ்தே சுடரை காண்பிக்கும் ஏதோவொன்று தான் நமக்கு இன்று தேவையாயுள்ளது என்று நான் உங்களுக்குக் கூறுகிறேன்.

57. நீங்கள் ஒரு பழைய சிறு விளக்கை முழுமையாகப் பெற்றுக் கொள்ளுங்கள் - அங்கே - கரியானது விளக்கின் திரியில் படிந்திருக்கும், அது உங்களுடைய விளக்கை முழுவதுமாகப் புகையும்படிச் செய்யும். நம்மிடமுள்ள காரியம்

அதுதான்; நாம் விளக்கில் அதிக அளவு கரியைப் பெற்றிருக்கிறோம், அதிக அளவு கரிப்பொருள். சுடரானது சரியாக அதை இழுக்க முடியவில்லை. அது கீழிருந்து போதுமான காற்றைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. நமக்குத் தேவை என்னவெனில், ஒரு நல்ல சுவாசிக்கும் ஆற்றலும், ஒரு நல்ல சுவாசமும், மீண்டும் பரத்திலிருந்து வருகிற பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானமாகிய புத்துணர்ச்சியான மூச்சும், பரிசுத்த ஆவியானவரின் கிரியைகள் சபையில் அடையாளங்களுடனும் அற்புதங்களுடனும் பின்தொடருவதும், உண்மையான தேவனுடைய முத்திரையும் தான்.

"நான் என்னவென்று உங்களிடம் கூறுகிறேன். நான் அசெம்பிளிஸிற்குப் போவேன், அவர்கள் என்னை சரியாக நடத்தவில்லையென்றால், நான் நான்குசதுரக்காரர்களிடம் போய் விடுவேன்." ஓ, நீங்கள் கரிபிடித்திருக்கிறீர்கள், நீங்கள் உங்களுடைய விளக்கை புகைக்கச் செய்து கொண்டிருக்கிறீர்கள். உங்களுடைய விளக்கினுடைய திரியை வெட்டி சுத்தப்படுத்துங்கள். ஆயத்தமாகுங்கள்; நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம். ஆனால் அவர்கள் அதை செய்வார்கள், யாராவது ஒருவர் அதை பிரசங்கிப்பார். யாராவது ஒருவர் அதை கூறுவார். அதைப் பெற்றுக்கொள்ளுகிற

அவர்களில் சிலர் எங்காவது இருப்பார்கள். அது சரியே. எத்தனை பேர் என்று எனக்குத் தெரியாது, ஏனெனில், "நோவாவின் காலத்தில் எப்படி நடந்ததோ, அப்படியே மனுஷகுமாரன் வரும் காலத்திலும் நடக்கும்" என்று அது கூறுகிறது, அங்கே எட்டு ஆத்துமாக்கள் இரட்சிக்கப்பட்டனர். ஆனால் அதை எத்தனை பேர் பெற்றுக் கொள்வார்கள் என்று எனக்குத் தெரியாது, ஆனால் தங்களுடைய விளக்குகளின் திரியை வெட்டிச் சுத்தப்படுத்துகிற அவர்களில் சிலர் அங்கிருப்பார்கள், அங்கே அதில் இருப்பது அவ்வளவு தான். விளக்கின் திரியை வெட்டிச் சுத்தப்படுத்தும் வேளை வந்துவிட்டது (lamp trimming time is on).

58. மேலும் உறங்கிக்கொண்டிருக்கும் கன்னிகை வெளியே போன போது - போது, அவள் ஏற்கனவே மிருகத்தின் முத்திரையைப் பெற்றிருந்தாள்... நீங்கள், "அது மிருகத்தின் முத்திரையா?" என்று கேட்கலாம். ஆம், மெய்யாகவே. எனவே காயீனும் முத்திரையைப் பெற்று வெளியே போனான். அது என்னவாக இருந்தது? பாப்டிஸ்டு சபையும், பெந்தெகோஸ்தே சபையும், பிரஸ்பிடேரியன் சபையும் பரிசுத்த ஆவியைப் பெற்றுக் கொள்வதற்குப் பதிலாக மிருகத்தின் முத்திரையை ஏற்றுக் கொண்ட போது,

அவர்கள் தேவனை விட்டுப் புறம்பே சென்று, அவர்களுக்கு ஒரு அமைப்பை ஏற்படுத்தினார்கள். அவர்கள் என்ன செய்தனர்? அவர்கள் ஒரு உண்மையில்லாத மனைவியை - உலகத்தினுடைய உண்மையற்ற ஒரு மனைவியைப் பெற்றுக் கொண்டு, வர்ணம் தீட்டப்பட்ட யேசபேல்களையும், மற்ற ஒவ்வொன்றையும், குட்டை தலைமுடி கொண்டவர்களையும், குட்டை உடைகளையும் பாவாடைகளை அணிந்து கொள்பவர்களையும், ஹோலிவுட் நாகரிகத்தையும் உள்ளே கொண்டு வந்தனர். இரண்டு அல்லது மூன்று மனைவிகளையுடைய டீக்கன்மார்களை உள்ளே அனுமதிக்கும்படியாக பிரசங்கிமார்கள் வெளியே போயினர்... மேலும் ஒரு மனிதன்...

59. நீங்கள், "நீர் எப்போதுமே நம்முடைய ஸ்திரீகளையும், நம்முடைய ஸ்திரீகளைக் குறித்துமே பேசிக்கொண்டிருக்கிறீர்" என்று கூறலாம். சரி, மனிதர்களே, அப்படியானால் ஒருவிசை உங்களை நான் நன்றாக அலசிப்பார்க்கிறேன். நான் உங்களிடம் ஒன்றைக் கூறட்டும். தன்னுடைய மனைவியை சிகரெட்டுகளைப் புகைக்கவும், குட்டை உடைகளை அணியவும் அனுமதிக்கும் எந்த மனிதனும் அவன் ஒரு மனிதனாய் இருந்தும் கூட அவன் மேல் கொஞ்சம் மரியாதையே எனக்கு உள்ளது. அவன் மிகவும் பெண் தன்மை

கொண்டவனாயிருக்கிறான், அவன் எதைச் சேர்ந்தவன் என்பதும் கூட அவனுக்குத் தெரியவில்லை. அவன் ஒரு மனிதனே அல்ல. அது சரியே. ஓ, அல்லேலூயா. அது சரியே. அவன் ஒரு மனிதனுக்கு இழிவான சாக்குப்போக்காக இருக்கிறான். ஓ, அவன் ஒருவேளை ஆறடி உயரமுள்ளவானாகவும், 200 பவுண்டுகள் எடையுள்ளவனாகவும் இருக்கலாம், ஆனால் அது எனக்கு ஒரு மனிதனைப் போன்று காணப்படவில்லை. உங்களுடைய வீட்டின் எல்லா இடங்களிலும் யார் முதலாளி (boss) என்பதை அது காண்பிக்கிறது. அவள் கோபத்தோடு தன்னுடைய காலை தரையில் மிதித்து நடந்து வந்து, "நான் இப்பொழுதே உன்னிடம் கூறுகிறேன்" என்று (கூறும்போது), நீங்கள் ஒரு வியாதிப்பட்ட பூனைக்குட்டியைப் போன்று தலைவணங்கி விடுகிறீர்கள். என்ன காரியம்? நமக்குத் தேவையானது...

நமக்கு இன்றைய தேவை என்னவெனில் மனிதர்களே. நமக்கு சுவிசேஷ பிரசங்கிமார்கள் தான் அவசியமாயுள்ளது. பிரசங்க பீடத்தில் நின்றுகொண்டு, அந்தக் காரியங்களைக் குறித்து பேசாமல் தவிர்த்து விடும் எந்தப் பிரசங்கியாரும் தான் தேவனால் அழைக்கப்பட்டிருந்தாலும் அவரிடம் சிறிதளவு மரியாதையே எனக்குள்ளது. சரி. பிரசங்க பீடத்தில் நின்று தேவனுடைய

சத்தியத்தை கூற வெட்கப்படுகிற ஒரு மனிதன், ஒரு ஸ்திரீ தன்னுடைய மயிரைக் கத்தரிப்பது ஒரு ஒழுக்கக்கேடான காரியம் என்பதை அறியும் போது... வேதாகமம்... ஒரு மனிதனுடைய மனைவி தன்னுடைய மயிரைக் கத்தரிக்கும்போது, அவளை விட்டு விலகி, அவளை விவாகரத்து செய்ய அவனுக்கு உரிமை உண்டு. வேதாகமம் அவ்வாறு கூறுகிறது. ஸ்திரீயினுடைய தலை யார்? அவளுடைய கணவன். வேதாகமம், "ஒரு ஸ்திரீ தன் மயிரைக் கத்தரித்துக் கொண்டால், அவள் தன்னுடைய தலையைக் கனவீனப்படுத்துகிறாள்" என்று கூறுகிறது. கனவீனமான எந்த ஸ்திரீயுடனும் வாழக்கூடாது. ஆமென். அவள் தன்னுடைய மகிமையை கத்தரித்துப் போடுகிறாள். சபையும் அதைத்தான் செய்கிறது. அவள் அதே காரியத்தைச் செய்கிற போது, அவளுடைய மகிமையின் நதியை அவள் துண்டித்துப் போடுகிறாள்.

உம். ஓ, தேவனே, நான் இந்தக் காரியங்களை ஏன் கூறுகிறேன்? ஆனால் இது சத்தியமாயுள்ளது. இல்லை, நமக்கு சமரசம் செய்கிறவர்கள் அவசியமில்லை. - நமக்குத் தேவையில்லை. நீதிக்காகவும் உரிமைக்காகவும் நின்று அது என்னவாயிருந்தாலும் அதைப் பொருட்படுத்தாமல் சத்தியத்தைக் கூறுகிற

மனிதர்களும் ஸ்திரீகளுமே நமக்குத் தேவை. ஆமென். தேவனுடைய முத்திரை...

என்னுடைய சகோதரனே, உன்னுடைய விளக்கின் திரியை வெட்டி சுத்தப்படுத்து. பரிசுத்த ஆவியானவரின் வெளிச்சமானது மீண்டும் புத்துணர்ச்சியோடு எரியட்டும். இது இருளடைந்து கொண்டிருக்கிறது. ஓ, இது அப்படிப்பட்ட ஒரு பயங்கரமான நேரமாயுள்ளது. இது இருளடைந்து கொண்டிருக்கிறது.

# ஜூன் 15



*அப். 16:29-32*

**29. அப்பொழுது அவன் தீபங்களைக் கொண்டுவரச்சொல்லி, உள்ளே ஓடி, நடுநடுங்கி, பவுலுக்கும் சீலாவுக்கும் முன்பாக விழுந்து,**

**30. அவர்களை வெளியே அழைத்துவந்து: ஆண்டவன்மாரே, இரட்சிக்கப்படுவதற்கு நான் என்ன செய்யவேண்டும் என்றான்.**

**31. அதற்கு அவர்கள்: கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள் என்று சொல்லி,**

**32. அவனுக்கும் அவன் வீட்டிலிருந்த யாவருக்கும் கர்த்தருடைய வசனத்தைப் போதித்தார்கள்.**

### *செய்தி:* உன் வீட்டார், ஆகஸ்டு 8, 1961

51. இப்பொழுது, நீதிமானாக இருக்கும்படி என்ன செய்ய வேண்டுமென்று தேவன் யோபிடம் கூறின அதே காரியத்தையே அவன் செய்து, (நீதிமானாயிருப்பதற்கு (செய்ய வேண்டிய) ஒரே காரியம் என்னவெனில், சர்வாங்க தகன பலி செலுத்துவதாகத் தான் இருந்தது), அது நீதியாக இருந்து... அவர் யோபையும் அவனுடைய வீட்டாரையும் இரட்சித்தார். அதன் பிறகு தேவனுக்கு முன்பாக நீதி என்பது என்ன? "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

எனவே, நான் என்னுடைய வீட்டாருக்காக விசுவாசம் கொண்டிருந்து, நீங்களும் உங்கள் வீட்டாருக்காக விசுவாசம் கொண்டிருப்பீர்களானால், அதை விசுவாசிப்பதின் மூலமாக, நாம் தேவனை நம்புகிறோம், அப்பொழுது நீதிக்காக தேவன் ஆபிரகாமுக்கோ, அல்லது யோபுவுக்கோ, அல்லது அவர்களில் யாருக்காவது செய்தது போல, நம்முடைய சொந்த

விசுவாசத்தையும் தேவன் கௌரவிக்கிறார். நீங்கள் பாருங்கள்? எனவே, நீதிக்காக அது நமக்கு பங்கிட்டுக் கொடுக்கப்பட்டுள்ளது, அவ்வாறு தான் நீங்களும் உங்கள் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்.

52. ஓ, அது ஒரு அற்புதமான காரியம் என்று நினைக் கிறேன். எனவே அப்படியானால், அது மாத்திரமல்ல, நான் ஒவ்வொரு சகோதரனுக்காகவும், என்னுடைய சகோதரர்கள் எல்லாருக்காகவும், என்னுடைய சகோதரிக்காகவும் உறுதியாகப் பற்றிக் கொண்டிருக்கிறேன். நான் அதற்காக மட்டும் பற்றிக் கொண்டிருக்கவில்லை, ஆனால் என்னுடைய சபையிலுள்ள ஒவ்வொரு நபருக்காகவும் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறேன்; உங்கள் எல்லாருக்காகவும் நான் பற்றிக் கொண்டிருக்கிறேன். நீங்கள் எனக்காக பற்றிக் கொண்டிருக்க வேண்டுமென்று நான் விரும்புகிறேன். ஏனென்றால் விசுவாசத்தினால் (உண்டாகும்) நீதியினிமித்தமாகவே. நாம் ஒரு சர்வாங்க தகன பலியைச் செலுத்த வேண்டியதில்லை; கிறிஸ்துவே நம்முடைய பலி. ஆனால் கிறிஸ்து செலுத்தின அந்த பலியில் நாம் விசுவாசம் கொண்டிருக்க வேண்டும், அவர் நமக்கு இம்மாதிரியான ஒரு-ஒரு வாக்குத்தத்தத்தைப் பண்ணியிருக்கிறார்: "நீங்கள் என் நாமத்தினாலே பிதாவினிடத்தில்

கேட்டுக்கொள்வதெதுவோ, நான் அதைச் செய்வேன். நீங்கள் ஜெபம் பண்ணும்போது, நீங்கள் கேட்டுக்கொண்டதைப் பெற்றுக் கொள்வீர்கள் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அது உங்களுக்கு உண்டாகும்."

இப்பொழுது, தேவன் இந்த டீன்ஏஜ் பிள்ளைகளை இரட்சிக்க வேண்டுமென்று நான் ஜெபித்துக் கொண்டிருந்து, அவர் அதைச் செய்வார் என்று நான் என்னுடைய முழு இருதயத்தோடும் அதை விசுவாசித்தால், பாருங்கள், அதே விதமாகத்தான் யோபுவும் தொடர்ந்து அசையாமல் நின்றான்.

53. "ஓ, இந்த வாலிப பையனைப் பாருங்கள், அவன் என்ன செய்து கொண்டிருக்கிறான் என்று பாருங்கள்" என்று கூறலாம். அவன் என்ன செய்து கொண்டிருந்தாலும், அல்லது அவள் என்ன செய்து கொண்டிருந்தாலும் கவலையில்லை, நான் இன்னும் அந்தப் பிள்ளையை சர்வ வல்லமையுள்ள தேவனுடைய கரத்தில் தான் வைத்திருக்கிறேன், மேலும் என்னுடைய - நானும் என் வீட்டாரும் இரட்சிக்கப்படுவோம், பாருங்கள்? ஏனென்றால் நான்...

நான் ஒருக்கால் அவர்கள் மரிப்பதற்கு முன்பாகவே மரித்துப் போகலாம், அப்படியிருந்த போதிலும், அவர்கள் எப்படியும் இங்கிருந்து

கடந்து போவதற்கு முன்பாகவே, தேவன் அவர்களை சரியாக அந்தப் பாதைக்கு திருப்புவார். நான்-நான் அதை விசுவாசிக்கிறேன்... எப்படியோ அல்லது வேறு (எதையாவது) செய்து, அவர்கள் நிச்சயமாக அந்தப் பாதைக்குத் திரும்பும் வரையில், அவர் அவர்களை மிகவும் துக்ககரமான நிலையில் ஆக்கி விடுவார். பாருங்கள்?

அந்தவிதமாகத்தான் அது இருக்கும் என்று நான் விசுவாசிக்கிறேன், "நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள்."

நான் அநேகரைக் கண்டிருக்கிறேன்... அது என்னுடைய கூட்டங்களுக்குள்ளே சம்பவிப்பதை நான் கவனித்திருக்கிறேன். அநேக நேரங்களில், தன்னுடைய வாழ்க்கை முழுவதும் முரட்டுத்தனமாக ஜீவித்து வந்திருந்த வயதான மனிதன் அங்கே வந்து தன்னுடைய முழங்கால்களில் விழுந்து, கதறி அழுது, பிறகு எழுந்து, "நல்லது, எனக்கு ஒரு அன்பான வயது சென்ற தாயார் இருந்தார்கள். ஓ, அவர்கள் இன்றிரவு பரலோகத்தில் இருந்து, கீழே நோக்கிப் பார்த்துக் கொண்டிருப்பார்களானால், நான் இந்தப் பீடத்தில் இருப்பதைக் கண்டு மகிழ்ச்சியடைவார்கள் என்று எனக்குத் தெரியும்" என்று கூறுவான்.

பாருங்கள்? அது என்ன, அந்த வயதான தாயார் ஜெபித்து விசுவாசம் கொண்டிருந்தார்கள், பாருங்கள். நெடுங்காலத்திற்கு முன்பே அவர்கள் மரித்துப் போய் விட்டார்கள், ஆனால் இங்கே அந்த ஜெபங்கள் இருக்கின்றன, ஏனென்றால் அந்த நீதி... பாருங்கள், நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள். எப்படி கிரியை செய்ய வேண்டும் என்று தேவனுக்குத் தெரியும். அதை எப்படி செய்ய வேண்டும் என்று அவருக்குத் தெரியும். எல்லாவற்றையும் எப்படி சரியாக செய்வது என்று அவர் அறிவார்.

54. **நான் அன்றொரு நாள் கூறினபடி, நாம் தேவனுடைய ஆவியினால் பிறக்கும் போது, தேவன் ஒரு இடத்தில் பலவீனமாகவும் வேறொரு இடத்தில் பலமாகவும் இருப்பதில்லை. நீங்கள் தேவனுடைய ஒரு சிறு நிழலை உங்களுக்குள் பெற்றிருப்பீர்களானால், அது வெறுமனே ஒரு மிகச்சிறிய அளவு தேவன் தான், அப்போதும் நீங்கள் சகல வல்லமையும் உடையவர்களாயிருக்கிறீர்கள். அப்போது நீங்கள் ஒரு உலகத்தை சிருஷ்டித்து, வெளியே போய், அதில் வாழ்வதற்கு போதுமான வல்லமையை உங்களுக்குள் பெற்றிருக்கிறீர்கள்.**

**ஆனால், நிச்சயமாகவே, அந்த வல்லமையானது விசுவாசத்தின் மூலமே ஆதிக்கம் செலுத்துகிறது.** அது அவ்வாறு இல்லாமலிருந்தால், நாம் எல்லாருமே அங்கே வெளியே நமக்கு ஒரு உலகத்தைக் கொண்டிருந்து, அதில் ஜீவித்துக் கொண்டிருப்போம். ஆனால் நீங்கள் தேவனுடைய ஒரு குமாரனாகவோ, அல்லது தேவனுடைய ஒரு குமாரத்தியாகவோ இருப்பீர்களானால், நீங்கள் உங்களுக்குள் தேவனுடைய வல்லமையைப் பெற்றிருக்கிறீர்கள். பாருங்கள்? எனவே அப்போது, நீங்கள்... அந்தப் பிரமாணமானது அந்த விசுவாசத்தை ஒரு குறிப்பிட்ட காரியத்துக்கு பற்றிப்பிடித்து வைத்துக் கொள்கிறது.

## ஜூன் 16



*மத்தேயு 11:23-24*

**23. வானபரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர் நகூமே, நீ பாதாளபரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்.**

24. நியாயத்தீர்ப்பு நாளிலே உனக்கு நேரிடுவதைப்பார்க்கிலும் சோதோம் நாட்டிற்கு நேரிடுவது இலகுவாயிருக்குமென்று உங்களுக் குச் சொல்லுகிறேன்.

*செய்தி:* **ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல், டிசம்பர் 4, 1965, பத்தி எண் 191-197**

**கலிபோர்னியாவில் நான் கடைசியாக அளித்த செய்தி என் நினைவுக்கு வருகின்றது. நான் மறுபடியும் அங்கு போகமாட்டேன் என்று நினைத்தேன். லாஸ் ஏஞ்சலிஸ் கடலுக்குள் ஒரு நாள் மூழ்கி விடும் என்று நான் அங்கு முன்னறிவித்தேன். அது கர்த்தர் உரைத்ததாவது! ஆகவே அது நிச்சயம் நிறைவேறும். அவளுடைய முடிவு நெருங்கி விட்டது. அது எப்பொழுது நேரிடும் என்பது எனக்குத் தெரியாது. ஆனால் அது நிகழுமென்பது உறுதி. நான் அவ்விதம் உரைத்தபின்பு நிலநடுக்கங்கள் உண்டாகி அந்தப் பட்டினத்தை அசைத்தன.**

தூதன் இறங்கி வந்தபோது உங்களில் சிலர் அந்தக் குன்றின் மேல் நின்று கொண்டிருந்தீர்கள். அப்பொழுது வெளிச்சம் உண்டாகி, நாம் நின்று கொண்டிருந்த குன்றைச் சுற்றிலும் அக்கினி

விழுந்தது. அப்பொழுது கற்பாறைகள் பிளவுபட்டு, உடைந்து, நம்மைச் சுற்றிலும் விழுந்தன. மூன்று முறை வானத்திலிருந்து இடிமுழக்கம் உண்டானது. அப்பொழுது நான், "மேற்கு கடற்கரையின் மேல் நியாயத்தீர்ப்பு விழும்" என்று அறிவித்தேன். இரண்டு நாட்கள் கழித்து அலாஸ்கா ஏறக்குறைய தண்ணீரில் மூழ்கிவிட்டது.

**இதை உரைத்த அதே தேவன், "லாஸ் ஏஞ்சலிஸ் அழிந்து விடும்" என்று உரைத்துள்ளார். அது எப்பொழுது நேரிடும் என்று என்னால் கூற முடியாது.**

கப்பர்நகூமைக் குறித்து ஆண்டவர் கூறினதை அப்பொழுது நான் யோசித்துக் கூட பார்க்கவில்லை. நான் வேதபுத்தகத்தைத் திறந்து இயேசு கூறினதைப் படித்தேன்; "வான பரியந்தம் உயர்த்தப்பட்ட கப்பர்நகூமே, நீ பாதாள பரியந்தம் தாழ்த்தப்படுவாய்; உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமிலே செய்யப்பட்டிருந்ததானால், அது இந்நாள் வரைக்கும் நிலைத்திருக்கும்" (மத். 11:23). அது உரைக்கப்பட்டு 150 ஆண்டுகளுக்குப் பின்னர், கப்பர்நகூம் தண்ணீரில் மூழ்கினது.

இவையனைத்தும் உரைத்து நிறைவேற்றின அதே தேவ ஆவியானவர், "தூதர்களின் பெயரை

(லாஸ் ஏஞ்சலிஸ்) சூடிக்கொண்டிருக்கும் கப்பர்நகூமே, நீ எவ்வளவாக உன்னை வானபரியந்தம் உயர்த்திக் கொண்டாய்! நீ சாத்தானின் உறைவிடமாக இருக்கின்றாய்.

போதகர்களின் கல்லறைத் தோட்டமாக நீ அமைந்திருக்கிறாய். நல்லவர்கள் உன்னிடம் வந்தால் அவர்கள் எலிகளைப் போல் மாண்டு போகின்றனர். உனக்கு என்ன நேர்ந்தது?

**தூதர்களின் பெயரால் உன்னை அழைத்துக் கொள்பவளே! உன்னில் செய்யப்பட்ட பலத்த செய்கைகள் சோதோமில் செய்யப்பட்டிருந்ததானால், அது இன்று நிலைத்திருக்கும். உன் நேரம் வந்து விட்டது" என்று கூறுகின்றார். நான் கூறினது நிறைவேறாமல் போனால், என்னைக் கள்ளத் தீர்க்கதரிசியாகக் கருதுங்கள்.**

# ஜூன் 17



*அப். 2:46-47*

**46. அவர்கள் ஒருமனப்பட்டவர்களாய் தேவாலயத்திலே அநுதினமும் தரித்திருந்து, வீடு**

**கள்தோறும் அப்பம்பிட்டு மகிழ்ச்சியோடும் கபட மில்லாத இருதயத்தோடும் போஜனம்பண்ணி,**

**47. தேவனைத் துதித்து, ஜனங்களெல்லா ரிடத்திலும் தயவுபெற்றிருந்தார்கள். இரட்சிக்கப் படுகிறவர்களைக் கர்த்தர் அநுதினமும் சபை யிலே சேர்த்துக்கொண்டு வந்தார்.**

*செய்தி:* **கேள்விகளும் பதில்களும் (2:19), ஆகஸ்ட் 23, 1964 காலை, பத்தி எண் 208-210, 214, 215**

**256.** *சகோ. பிரான்ஹாமே, நம்முடன் வேற்றுமை கொண்டிருக்கும் மற்ற சபைகளுக்கு நாம் போகலாமா?*

நிச்சயமாக, ஆம்! அவர்கள் இயேசுவுடன் வேற்றுமை கொண்டிருந்த போதிலும், அவர் அங்கு சென்றார். போங்கள். “நம்முடன் வேற்றுமை கொண்டிருக்கும் மற்றொரு சபைக்கு நாம் செல்லலாமா?” என்று கேட்கப்பட்டுள்ளதை இங்கு நாம் கவனிக்கிறோம். நிச்சயமாக, நான்... நான் கடற்கரையிலுள்ள ஒரே ஒரு கூழாங்கல் அல்ல, உங்களுக்குத் தெரியும். தேவபக்தியுள்ள மற்ற மனிதர் எல்லாவிடங்களிலும் உள்ளனர். அவர்களில் நானும் ஒருவன் என்று

நம்புகிறேன். பாருங்கள்? ஆனால் நீங்கள் இங்கு வந்து...

அன்றொரு நாள் இது போன்ற ஒன்றைக் குறித்து என்னிடம் கேட்கப்பட்டது. அரிசோனாவிலுள்ள ஒரு குழு இதைக் குறித்து என் கவனத்தை ஈர்த்தது. போதகர் குழு ஒன்று என்னிடம், "சகோ. பிரான்ஹாமே, உங்களுக்கு விரோதமாக எங்களுக்குள்ள ஒரே ஒரு காரியம் (பல காரியங்களில் ஒன்று) என்னவெனில், உங்களுடன் இங்கு வரும் மக்களை, வேறெந்த சபைக்கும் போக வைக்க எங்களால் முடியவில்லை. அவர்களுக்கு பிள்ளைகள் உள்ளனர், ஆனால் அவர்கள் சபைக்குச் செல்ல மறுக்கின்றனர்; எங்கள் சபைக்கு வருவதற்கு அவர்கள் வரவேற்கப்படுகின்றனர் என்று நாங்கள் சொன்ன போதிலும்" என்றனர்.

நீங்கள் அவர்களுடைய சபைகளில் சேர்ந்துகொள்ள உங்களை வற்புறுத்துகின்றனர் என்பதை அறிவேன், ஆனால் நீங்கள் சேரவேண்டிய அவசியமில்லை; உங்கள் பிள்ளைகளை எங்காவது ஞாயிறு பள்ளிக்கு அனுப்புங்கள். நீங்கள் சபைக்குச் செல்லுங்கள். ஞாயிற்றுக்கிழமையில் வீட்டில் உட்கார்ந்து கொண்டிருக்கவோ, மீன்பிடிக்கவோ, வேட்டைக்கோ செல்லாதீர்கள்.

நீங்கள், “நல்லது, நான் சட்டதிட்டங்களை கடைபிடிக்கும் ஒருவன் அல்ல (legalist)” எனலாம்.

நல்லது. நீங்கள் கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலை அவமதிக்காமல், சிறிது காலம் அவ்விதம் இருப்பது நல்லது. நீங்கள் எங்காகிலும் சபைக்குச் செல்லுங்கள்.

*****

நான் பீட அழைப்பு கொடுக்கும் போது, நான் கூறுவதைக் கேட்டிருக்கிறீர்களா? நான் கூறுவது என்னவெனில்... அவர்களை எழுந்து நிற்கச் செய்து, அவர்களை இரட்சிப்படையச் செய்த பிறகு, நான், “உங்கள் வீட்டிற்கு அருகிலுள்ள ஏதாகிலும் ஒரு நல்ல முழு சுவிசேஷ சபைக்குச் சென்று அதை உங்கள் சபையாக்கிக் கொள்ளுங்கள்” என்று கூறுவது வழக்கம். அவ்விதம் நான் கூறுவதை உங்களில் எத்தனை பேர் கேட்டிருக்கிறீர்கள்? நிச்சயமாக, நிச்சயமாக.

*****

உங்களால் போக முடியாவிட்டால்... உங்களால் இந்த கூடாரத்துக்கு வர முடியாவிட்டால் எங்காவது ஒரு சபையைத் தெரிந்து கொண்டு அங்கு போங்கள். அவர்கள் செய்யும் எல்லாவற்றையும் நீங்கள் ஏற்றுக் கொள்ள

வேண்டிய அவசியமில்லை. அவர்கள் ரொட்டியின் எந்த பாகத்தைப் பரிமாறுகிறார்களோ அதைப் பெற்றுக் கொள்ளுங்கள் அவர்களுக்கு பூண்டு (garlic) இருக்குமானால், அதை விட்டு விடுங்கள். பாருங்கள்? அது உண்மை. அவர்களைச் செய்ய வைக்க என்னால் முடியாது, ஆனால் அது தான் முற்றிலும்... நிச்சயமாக, நீங்கள் சபைக்குப் போங்கள். சபை கதவு எங்கு திறவுண்டாலும், நீங்கள் முடிந்த வரையில் அங்கு விரைந்து செல்லுங்கள். அவர்கள் விசுவாசிக்காமல் போனால், நல்லது... இப்பொழுது, நீங்கள் பங்கு கொள்ள வேண்டியதில்லை. அவர்களைச் சேராதீர்கள், அந்த சபைகளில் ஏதொன்றையும் சேர்ந்து கொள்ளாதீர்கள்; ஆனால் அவர்களிடம் செல்லுங்கள்; அவர்களிடம் ஐக்கியம் கொள்ளுங்கள். அது கர்த்தருடைய சித்தம் அல்ல என்று உங்களுக்கு எப்படித் தெர்யும்? அவர் சகலத்தையும் நன்மைக்கு ஏதுவாக செய்வாரென்று அவர் கூறியுள்ளார். ஒருக்கால் இரட்சிக்கப்பட வேண்டிய ஒரு ஆத்துமா அங்கு இருக்கக் கூடும். அப்படிப்பட்டவர்களுக்கு நீங்கள் வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்யலாம். பாருங்கள்? அங்கு செல்லுங்கள். அப்பொழுது ஜனங்கள், "அவள் மிகவும் நல்ல கிறிஸ்தவ பெண்மணி, அவர்கள் மிகவும் ஒரு நல்ல கிறிஸ்தவ தம்பதிகள்; அவன் மிகவும் ஒரு நல்ல கிறிஸ்தவ பையன், அவள்

மிகவும் நல்ல கிறிஸ்தவ பெண்” என்று சொல்ல முற்படுவார்கள். “என்னே, அவர்களுடன் சம்மந்தம் கொள்ள எனக்குப் பிரியம்... அவர்களுக்கு ஏதோ ஒன்று உள்ளது போல் அவர்கள் உண்மையில் நடந்து கொள்ளுகிறார்கள். அது என்ன?” என்பார்கள்.

அப்பொழுது நீங்கள், “இதுதான் அது” என்று அவர்களுக்கு எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் உப்பாயிருங்கள், அப்பொழுது அவர்களுக்கு தாகமுண்டாகும்.

# ஜூன் 18

*1 நாளாகமம் 16:25*

**கர்த்தர் பெரியவரும் மிகவும் துதிக்கப்படத் தக்கவருமாயிருக்கிறார்; எல்லா தேவர்களிலும் பயப்படத்தக்கவர் அவரே.**

*செய்தி:* **என் ஊழியத்தின் தற்போதைய கட்டம், செப்டம்பர் 8, 1962, பத்தி எண் 19-31**

உங்களுக்கு ஞாபகமுள்ளதா, அண்மையில் எனக்குக் கிடைத்த அந்த தரிசனத்தில் – அதை

சிறு மறுரூபப்படுதல் என்று அழைக்க விரும்புகிறேன் — நான் மேலே எடுக்கப்பட்டு லட்சக்கணக்கான ஜனங்களைக் கண்டு, நான் திரும்பிப்பார்த்த போது, என் உடலைக் கீழே கண்டேன். "நான் இயேசுவைக் காண விரும்புகிறேன்" என்றேன்.

"அவர் இன்னும் உயரத்தில் இருக்கிறார்" என்றார்.

நல்லது, பாருங்கள், ஜனங்கள் மரிக்கும் போது, அவர்கள் உடனே தேவனிடம் செல்வதில்லை. உங்களுக்குப் புரியும் என்று நிச்சயமுடையவனாயிருக்கிறேன். ஒருக்கால் என்னால் முடிந்த வரையில் அதை நான் உங்களுக்கு விளக்கித் தர வேண்டும். நீங்கள் அவசரமாக போக வேண்டுமா? நாம் நேரத்தை எடுத்துக்கொண்டு, கூடுமான வரையில் அதை தெளிவுபடுத்துவோம்.

நாம் இவ்வுலகிற்கு வரும்போது, இங்கு மூன்று பரிமாணங்களில் வாழ்கிறோம் என்பதை நாம் நினைவுகூர வேண்டும். அவை என்னவென்று என்னால் குறிப்பிட முடியுமா இல்லையாவென்று எனக்குத் தெரியவில்லை. அவைகளில் ஒன்று ஒளி, மற்றொன்று பொருள் (matter). டாமி, மூன்றாவது என்னவென்று ஞாபகமுள்ளதா? (யாரோ ஒருவர் ஏதோவொன்றை

கூறுகிறார் – ஆசிரியர்) ஊ? ("அணு.") அணுவா? (வேறு யாரோ ஒருவர், "காலம்" என்கிறார்) காலம். சரி. இப்பொழுது, **ஒளி, பொருள், காலம். நமது ஐம்புலன்கள் இந்த பரிமாணங்களுடன் தொடர்பு கொள்கின்றன.** நமது பார்வை ஒளியுடன் தொடர்பு கொள்கிறது, நமது உணர்ச்சி பொருளுடன் தொடர்பு கொள்கின்றது, இப்படியாக.

ஆனால் **விஞ்ஞானத்தின் மூலம் நாம் நான்காம் பரிமாணத்துடன் தொடர்பு கொள்கிறோம்.** இப்பொழுது இந்த கட்டிடத்தின் வழியாக படங்களும், வானொலி குரல்களும், தொலைக்காட்சி படங்களும் வந்து கொண்டிருக்கின்றன. இவைகளுடன் நமது புலன்கள் தொடர்பு கொள்ள இயலவில்லை. ஆனால் அவர்களிடம் ஒரு குழாயோ அல்லது ஒரு படிகமோ உள்ளது. அது ஈதர் அலைகளை கிரகித்துக் கொண்டு அவைகளைக் காண்பிக்கிறது. எனவே பாருங்கள், இந்த கட்டிடத்திற்குள்ளேயே, ஜனங்கள் புரியும் செயல்களும், காற்றிலே அவர்களுடைய குரல்களும் உள்ளன. அவை இங்குள்ளன. அது நமக்குத் தெரியும். அது முற்றிலும் உண்மை. நீங்கள் செய்ய வேண்டிய ஒன்றே ஒன்று; அவர்கள் அதை கிரகிக்க வைக்கின்றனர்... விஞ்ஞானம் கண்டுபிடித்த இவைகளை அவர்கள் எவ்விதம் செய்கின்றனர்

என்று எனக்குப் புரிவதில்லை. ஆனால் நான்காம் பரிமாணம் ஒன்றுண்டு என்பதை அது நமக்கு நிரூபிக்கிறது.

**பாவி, அவிசுவாசி மரித்த பிறகு போகும் இடமே ஐந்தாம் பரிமாணம்.** அந்த ஐந்தாம் பரிமாணம் மிகவும் பயங்கரமான பரிமாணம். இந்த மனிதன்...

**ஒரு கிறிஸ்தவன் மரிக்கும் போது, அவன் ஆறாம் பரிமாணத்துக்குச் செல்கிறான்.**

**தேவன் ஏழாம் பரிமாணத்தில் இருக்கிறார்.**

அப்படியானால், பாருங்கள், கிறிஸ்தவன் மரிக்கும்போது, அவன் தேவனுடைய பலிபீடத்தின் கீழ், தேவனுடைய சமுகத்துக்குள், பலிபீடத்தின் கீழ் சென்று அங்கு இளைப்பாறுகிறான்.

இதை தனித்தனியே பார்ப்போமானால். ஒரு மனிதனுக்கு தீக்கனவு (nightmare) உண்டாகுமானால், அவன் முழுவதும் உறக்க நிலையில் இல்லை, அவன் விழித்துக் கொண்டிருக்கவும் இல்லை. அவன் உறக்கத்துக்கும் விழிப்புக்கும் இடையே உள்ள நிலையில் இருக்கிறான். அது தான் அவனுக்கு பயங்கரமான நடுக்கம் ஏற்படும்படி செய்து, அவனை அலற வைக்கிறது. ஏனெனில் அவன் உறங்கிக் கொண்டிருக்கவில்லை, விழித்துக்

கொண்டிருக்கிறான். அதை நாம் எடுத்துக் கொண்டால், மனம் மாற்றம் அடையாத ஒரு மனிதன் எங்கு செல்கிறான் என்பதை அது காண்பிக்கிறது. அவன் தன் காலத்தை வாழ்ந்து முடித்து விட்டு, உலகில் மரிக்கிறான். அவன் தேவனுடைய சமுகத்தில் செல்ல முடியாது. ஏனெனில் இரத்தம் இல்லாமல் அங்கு செல்ல அவன் தகுதியுடையவன் அல்ல. அவன் மாட்டிக் கொள்கிறான். அவனால் மறுபடியும் உலகத்திற்கு வரமுடியாது, ஏனெனில் உலகத்தில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் இடையிலே மாட்டிக் கொண்டு தீக்கனவைப் பெறுகிறான். பாருங்கள்? அவன் தேவனுடைய சமுகத்துக்குச் சென்று இளைப்பாற முடியாது. அதே சமயத்தில் அவனால் உலகத்திற்கு வரவும் முடியாது. ஏனெனில் அவனுடைய காலம் முடிந்து விட்டது. அவன் தீக்கனவில் இருக்கிறான். அங்கே அவன் நியாயத்தீர்ப்பு நாள் வரைக்கும் இருக்கிறான். அதில் இருப்பது மிகவும் பயங்கரமான காரியம், பாருங்கள்.

இந்த தரிசனத்தில், நான் ஆறாம் பரிமாணத்துக்கு எடுக்கப்பட்டேன் என்று நினைக்கிறேன். திரும்பிப் பார்க்கும் போது, என்னால் காண முடிந்தது. பாருங்கள், அந்த பார்வை பூமிக்குரிய கண்களினால் காணும் பார்வையல்ல. அந்த பார்வை மேலானது...

**அவர்களுக்கு அங்குள்ள பார்வை, நமது மாம்ச புலன்கள் தொடர்பு கொள்வதைக் காட்டிலும் மிக அதிக தூரம் தொடர்பு கொள்ள வல்லது.**

சில நாட்களுக்கு முன்பு அதை இங்கு விளக்கினேன். நான் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியைக் கண்டேன். அவர்கள் ஒரு மனிதனை கடலில் இரண்டு மைல் அல்லது ஒரு மைல் ஆழத்தில் இறக்கி விட்டனர். ஒளிக்கதிர்கள் அங்கிருந்து புறப்பட்டு சென்றன. அவர்கள் கடலில் வாழும் பிராணிகளைக் காண்பித்தனர். அப்பொழுது ஒரு மீன் வந்தது - விகாரமாகத் தோற்றமளித்த ஒன்று. அது நள்ளிரவு, அங்கு மிகவும் இருட்டாக இருந்தது. அவைகளுக்கு மூக்கில் பாஸ்வரம் (phosphorus) இருந்தது, கண்கள் இல்லை. அவை இரை தின்ன வேண்டும். எனவே அவை இரை தேட வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. கண் பார்வையினால் அல்ல. ஏனெனில் அங்கு உபயோகிக்க அவைகளுக்கு கண்கள் இல்லை. தங்கள் இரையைக் கண்டுபிடிக்க, அவை வேறொரு புலன் மூலம் வழிநடத்தப்பட்டன. "நான் மாத்திரம் என் பார்வையினால் அந்த மீனை கட்டுப்படுத்த முடியுமென்றால், அதை வெவ்வேறு இடங்களுக்கு நடத்திச் சென்று, எவ்வளவு அதிகமாக அதற்கு இரையை அளிக்க முடியும்? அது தொடர்பு

கொள்ளும் ‘ரேடாரை’க் (radar) காட்டிலும் என் பார்வை எவ்வளவு மேலானது” என்று எண்ணினேன்.

அப்பொழுது எனக்கு இது மனதில் தோன்றியது: “நான் மாத்திரம் என்னை முழுவதுமாக தேவனிடம் அர்ப்பணித்தால், தேவனுடைய பார்வையும் புலன்களும் எவ்வளவு அதிகம் சக்தி வாய்ந்தவை! நாம் காண்பவைகளைக் காட்டிலும் இன்னும் அதிகமாக நம்மை வழிநடத்தக்கூடியவர் யார்? ஏனெனில் அவர் நமக்களிக்கும் விசுவாசம் நம்முடைய கண்களினால் நாம் காணாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது.” அந்த மீன் மற்ற மீன்களைப் போலவே மேலே வர முடியாது. ஏனெனில் அது அழுத்தம் கொண்டுள்ளது. அதை நீங்கள் மேலே கொண்டு வந்தால், அது வெடித்து விடும் – நாம் உயர செல்லும்போது, வெடிப்பதை தடுக்க முடியாதது போல. நாம் வாழும் இடத்துக்கு ஏற்றவாறு அழுத்தம் கொண்டுள்ளோம்.

அந்த சிறிய மீன் மாத்திரம் இங்கு வந்து என்னைப் போல ஆக நேர்ந்தால், அது மறுபடியும் அந்தகாரத்துக்கு சென்று சிறு மீனாக இருக்க விருப்பம் கொள்ளுமா? அதற்கு மறுபடியும் மீனாக இருக்க விருப்பம் இருக்காது; ஏனெனில் அது மீனைக் காட்டிலும் உயர்ந்தது,

அது ஒரு மனிதன். அதன் புலன்கள் உயர்ந்தவை, அதன் புரிந்து கொள்ளும் தன்மை மேலானது, அதன் அறிவு உன்னதமானது. அதை ஒரு கோடியில் பெருக்குங்கள், அதை தான் நீங்கள் இங்கிருந்து மேலே தேவனுடைய சமுகத்துக்கு செல்லும்போது பெறுவீர்கள். அப்பொழுது ஒரு மனிதன் இங்கிருந்ததைக் காட்டிலும் மிக உயர்ந்த நிலையை அடைவான். நீங்கள் மறுபடியும் மனிதனாக இருக்க, வியாதியும் அழிவும் நேரிடக்கூடிய பூச்சரிக்கும் இந்த சரீரத்தில் வாழ, ஒருபோதும் விரும்ப மாட்டீர்கள். நான் முப்பது ஆண்டுகளாக உலகம் முழுவதும் இந்த சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களிடம், ஆதாயமாகப் பெற்றுக் கொள்ள பரலோகம் ஒன்று உண்டென்றும், நாம் புறக்கணிக்க வேண்டிய நரகம் ஒன்று உண்டென்றும், உங்களை நேசிக்கும் தேவன் ஒருவர் இருக்கிறார் என்றும், மீட்கும் வல்லமை ஒன்று உண்டென்றும், அதை நீங்கள் ஏற்றுக்கொள்ள ஆயத்தமாயுள்ள எந்த நேரத்திலும் உங்களிடம் வர அது காத்திருக்கிறது என்றும் கூறி வந்திருக்கிறேன். இதுவே என் இருதயத்தில் இருந்து வந்திருக்கிறது.

தண்ணீரில் மூழ்கிக்கொண்டிருக்கும் ஒரு மனிதன் அங்கு ஒரு கயிறு தொங்கிக் கொண்டிருப்பதைக் கண்டு, “அந்த கயிற்றை பிடித்துக் கொண்டு என்னால் மேலே வர முடியும்.

ஆனால் அந்த கயிற்றைப் பெற நான் பாத்திரன் அல்ல" என்று சொல்வது போல்.

நீங்கள் தண்ணீரை விட்டு வெளியே வந்து உங்களைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே அந்த கயிறு அங்கு வைக்கப்பட்டுள்ளது. பாவிகளை இரட்சிக்க வேண்டும் என்னும் நோக்கத்துக்காகவே இயேசு கிறிஸ்து மரித்தார். அவர் நித்திய ஜீவன் என்னும் கயிற்றை தொங்க விட்டிருக்கிறார். அது இன்றிரவு ஒவ்வொரு பாவியின் தலை மேலும், "அதை விட்டு வெளியே வா" என்று எழுதப்பட்டுள்ள வரவேற்பு அட்டையுடன் ஆடிக்கொண்டிருக்கிறது. அப்படி செய்ய நீங்கள் விரும்பினால், அதற்கான ஆயத்தம் செய்யப்பட்டு விட்டது.

அந்த இடத்தையும், இந்த உலகம் நினைத்துக் கூட பார்க்க முடியாத நிலையில் அந்த ஜனங்களையும் நான் கண்ட போது, அது மிகவும் மகிமையாயிருந்தது. அங்கு பாவம் இருக்க முடியாது, மரணமோ அல்லது வேறெதுவோ அந்த இடத்தில் நுழைய முடியாது. அங்கு ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசமில்லை, இனச்சுரப்பிகள் அவர்களை விட்டுப் போயிருந்தன. அங்கு விபசாரமோ மற்றெதுவோ இருக்க முடியாது. ஆனால் ஒரு பெண் தன் பெண் உருவத்தையும், ஒரு ஆண் தன் ஆண் உருவத்தையும்

கொண்டிருந்தனர். அவர்கள் சதாகாலங்களிலும் அப்படியே இருப்பார்கள்.

# ஜூன் 19



*1 நாளாகமம் 29:11*

**கர்த்தாவே, மாட்சிமையும் வல்லமையும் மகிமையும் ஜெயமும் மகத்துவமும் உம்முடை யவைகள்; வானத்திலும் பூமியிலும் உள்ளவை களெல்லாம் உம்முடையவைகள்; கர்த்தாவே, ராஜ்யமும் உம்முடையது; தேவரீர் எல்லாருக்கும் தலைவராய் உயர்ந்திருக்கிறீர்.**



*செய்தி:* **கிறிஸ்து தமது சொந்த வார்த்தையில் வெளிப்படுகின்றார், ஆகஸ்ட் 22, 1965 காலை, பத்தி எண் 68-69**

வானத்தில் பறந்து கொண்டிருக்கும் அந்த தட்டுகள் — அவர்கள் ‘பறக்கும் தட்டுகள்’ என்று அழைக்கின்றனர்... சரி, அதை பேசாமல் அப்படியே விட்டுவிடுவது நல்லது. “அவர்கள் (பறக்கும் தட்டில் வருகிறவர்கள்) எவ்விதம் காணாமற் போய் விடுகின்றனர் என்பதைக் குறித்து கேள்விப்பட்டீர்களா?” என்று கேட்கின்றனர்.

அவர்கள் சொல்வதைக் கேளாதீர்கள். அவர்கள் அங்கு தான் நின்று கொண்டிருக்கின்றனர். அவர்கள் நமது கண்களுக்குத் தென்படாமல் மறைந்து விடுகின்றனர்.

அப்படித்தான் எடுத்துக்கொள்ளப்படுதலும் இருக்கும். அவைகளில் ஒன்று கீழே இறங்கி வரும். பூமிக்குரிய இந்த சரீரம் வானத்துக்குரிய சரீரத்தை தரித்துக் கொள்ளும். அப்பொழுது தோல், மயிர், எலும்புகள்... அது ஒரு நொடிப் பொழுதில் மறுரூபமாகும். அது விண்வெளியிலிருந்து கீழே இறங்கி வந்து அவர்களைக் கொண்டு செல்லும். அவையெல்லாம் (பறக்கும் தட்டுகள்) இப்பொழுதே வந்து கொண்டிருப்பதை நாம் காண்கிறோம். 'பென்டகன்' வானத்தில் தோன்றும் அந்த மர்மமான ஒளியைக் குறித்து வியந்து கொண்டிருக்கிறது. ஜெபர்சன்வில்லில் வெளியிடும் செய்தித்தாள் ஒன்றில் இந்த மர்மமான ஒளியைக் குறித்து வெளியிட்டிருந்தனர். "அது என்னவென்று அவர்களுக்குத் தெரியவில்லை" என்று அதில் எழுதியிருந்தது. சிறு பிள்ளைகளே, நான் கூறுவதைக் கேளுங்கள். வரப்போகும் ஒரு நாளில் அவை உங்களையும் கொண்டு செல்லும் (பாருங்கள், பாருங்கள்?). கவலைப்பட வேண்டாம்.

“சோதோமின் நாட்களில் நடந்தது போல...” என்று இயேசு கூறினதை நினைவு கூருங்கள்.

தேவன் சில தூதர்களுடன் இறங்கி வந்தார். அப்பொழுது அவர்கள் விசாரணை நியாயத்தீர்ப்பை (Investigation Judgement) நடத்தினர். அவர், “பாவம் நிறைந்த கூச்சலை நான் கேட்டேன். அது மிகவும் உரத்த சத்தமாயிருந்தது. அது உண்மையா இல்லையா என்று கண்டறிய நான் இறங்கி வந்தேன்” என்றார். அது சரி தான். அந்த பிரதானமானவர் ஆபிரகாமுடன் பின்தங்கி, அவருக்குப் பின்னால் இருந்த சாராளின் இருதயத்திலுள்ள சிந்தனைகளைப் பகுத்தறிய முடிந்தது.

இப்பொழுது நீங்கள் சற்று கவனிப்பீர்களானால், இன்றைக்கும் அதுவே சம்பவிக்கிறது. அது விசாரணை நியாயத்தீர்ப்பு, சற்று பின்பு, சபையானது அதன் ஸ்தானத்தில் நிலைநின்று, எல்லா வித்துக்களும் அதனிடம் கொண்டு சேர்க்கப்பட்ட பின்பு, அவர்கள் போய்விட்டிருப்பார்கள். அவர்களுக்கு நேர்ந்தது என்னவென்று மற்றவர்களுக்கு தெரியாது. அவர்களைத் தேடிக்கொண்டு ஒருவர் ஒருபுறமாக செல்வார். பாருங்கள்? ஒருவர் போதகர் வீட்டுக்குச் செல்வார். வேறொருவர் இங்கும் வேறொருவர் அங்கும் செல்வார்கள். அவர்கள் அங்கில்லை

என்பதை அறிந்து கொள்வார்கள். இவர்களுக்கு முன்னடையாளமாயிருந்த ஏனோக்கு காணப்படாமற் போனான். தேவன் அவனை எடுத்துக் கொண்டார் (ஆதி 5:24). விசாரணைக்காக அவர்கள் இறங்கி வருகின்றனர். ஏனோக்கு மறுரூபமாதலின் தொடர்ச்சியாக, தற்போதைய இஸ்ரவேலருக்கு முன்னடையாளமாக, அவர்கள் பேழைக்குள் பிரவேசிக்கின்றனர்.

# ஜூன் 20



*1 நாளாகமம் 16:34*

**கர்த்தரைத் துதியுங்கள், அவர் நல்லவர், அவர் கிருபை என்றுமுள்ளது.**



*செய்தி:* **கேள்விகளும் பதில்களும், ஆகஸ்ட் 30, 1964 காலை, கேள்வி எண் 339**

**முத்திரைகள் திறக்கப்பட்ட போது காலம் முடிவுறுகிறது என்றால், அப்பொழுது... முத்திரைகள் திறக்கப்பட்ட போது காலம் முடிவுற்றது என்றால்** (என்னை மன்னிக்கவும்)**, அப்பொழுது ஆயிரம் வருட அரசாட்சி காலமும் முடிந்திருக்க வேண்டுமே, இல்லையா?**

இல்லை, இல்லை! முத்திரைகள் திறக்கப்பட்ட போது, காலம் முடிவுறவில்லை. அதை தவறாகப் புரிந்து கொண்டீர்கள். அப்பொழுது என்ன நடந்ததென்றால், இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டன, காலம் முடிவுறவில்லை. பாருங்கள்? இப்பொழுது உன்னிப்பாக கவனியுங்கள், நீங்கள் இதை ஒலிநாடாவிலிருந்து பெறுவீர்களானால், ஒலிநாடாவைப் போட்டுக் கேளுங்கள்.

காலம் முடியவில்லை... இந்த கேள்வியைக் கேட்டவர் ஆயிரம் வருட அரசாட்சி முடிவடைந்து விட்டது என்னும் நம்பிக்கை கொண்ட கூட்டத்தாரில் ஒருவராக இருக்க வேண்டும். ஏனெனில் பாருங்கள்? சபையானது வீடுசென்று பூமிக்குத் திரும்ப வந்த பிறகு நமக்கு ஆயிரம் ஆண்டுகள் இருக்கும். புதிய வானம் புதிய பூமியின் போது காலம் முடிவடைகின்றது.

இப்பொழுது, ஆயிரம் வருட அரசாட்சியின் காலம் புதிய வானமும் புதிய பூமியும் அல்ல. ஆயிரம் வருட அரசாட்சிக்கு பிறகும் பாவம் இருக்கும். ஆயிரம் வருட அரசாட்சி, நோவா பேழைக்குள் பிரவேசித்து, தண்ணீருக்கு மேலே உயர்த்தப்பட்டு, மற்ற பக்கத்தில் காமையும் மற்றவர்களையும் கொண்டு வந்ததற்கு முன்னடையாளமாயுள்ளது. பாவமும் கூட பேழைக்கு வெளியே வந்தது. பாருங்கள்?

ஆனால் ஏனோக்கோ மேலே எடுத்துக்கொள்ளப்பட்டான், அவன் மேலே எடுத்துக்கொள்ளப்பட்ட மணவாட்டிக்கு முன்னடையாளமாயிருக்கிறான், மற்ற பக்கத்தில் கொண்டு வரப்பட்டவர்களுக்கு அல்ல. எனவே பாவம் ஆயிரம் வருட அரசாட்சியின் மறுபக்கத்திலும் இருக்கும், ஆனால் ஆயிரம் வருட அரசாட்சியின் போது அல்ல. பாருங்கள்? ஆயிரம் வருட அரசாட்சியின் போது சமாதானம் நிலவும். பாருங்கள்? ஆயிரம் வருட அரசாட்சியின் மறுபக்கத்தில் பாவம் ஒழிக்கப்படும், அதன்பிறகு காலம் என்பது மறைந்து விடும்.

இப்பொழுது, பரிசுத்த ஆவியால் அருளப்பட்ட ஏழு முத்திரைகள் திறக்கப்படுதல், நமக்கு முன்பிருந்த காலங்களில் விடப்பட்டிருந்தவைகளை நமக்கு தெரியப்படுத்துவதற்காகவே.

*****

அடுத்தபடியாக நடக்கவிருப்பது, சபை எடுத்துக்கொள்ளப்படுதலும், மோசேயும் எலியாவும் திரும்ப வருதலும், மணவாட்டியும் மணவாளனும் பூமியில் ஆயிரம் வருட காலம் அரசாட்சி செய்தலும், அதன்பிறகு நியாயத்தீர்ப்பும், பிறகு பாவம் முழுவதுமாக அழிக்கப்படுதலும். அப்பொழுது காலம் என்பது இருக்காது.

இப்பொழுது... முடியவில்லை... முத்திரைகள் காலத்தை முடித்து விடவில்லை. ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிறகு காலமும் காலங்களும். இல்லை! ஆயிரம் வருட அரசாட்சிக்குப் பிறகும் காலம் என்பது இருக்கும்.

# குடும்ப பலிபீடம்

# (THE FAMILY ALTAR)

தேர்ந்தெடுக்கப்பட்ட வேதவாக்கிய வாசிப்புகள் மற்றும் வில்லியம் பிரன்ஹாம் அவர்களின் செய்திகளிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சிந்தனைகள்